# **கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்**,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 6209/ 2012 / எம்சி. 8 நாள் : 28.05.2012**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் 30.05.2012 புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

**/ உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற அவசரக் கூட்டம் - மே 2012

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | வடக்கு மண்டலம் - வார்டு எண் 3 – சுப்பிரமணியம்பாளையத்தில் உள்ள வணிக வளாகக் கடைகள் - ஏல வைப்புத்தொகை மற்றும் காப்புத்தொகை நிர்ணயம் செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | வடக்கு மண்டலம் - வார்டு எண் 31 – விளாங்குறிச்சி ரோட்டில் உள்ள உள்ள வணிக வளாகக் கடைகள் - ஏல வைப்புத்தொகை மற்றும் காப்புத்தொகை நிர்ணயம் செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | வடக்கு மண்டலம் - துடியலூர் வார சந்தை குத்தகை இனம் - உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது தொடர்பாக |
| 4 | மத்திய மண்டலம் - பூமார்க்கெட் அருகில் உள்ள கடை எண் 1 - உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | மத்திய மண்டலம் - வார்டு எண் 81 – சி.எம்.சி. காலனி சமுதாயக் கூடம் - வாடகை நிர்ணயம் செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| 6 | மத்திய மண்டலம் - வார்டு எண் 82 – என்.எச். ரோடு விக்டோரியா ஹால் மேற்கில் உள்ள இரண்டு கடைகள் - மின்ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 7 | மத்திய மண்டலம் - 2012-15 ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் மற்றும் தங்கும் விடுதி - உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | மத்திய மண்டலம் - 4 குத்தகை இனங்கள் - பொதுஏலம் நடத்தி ஒப்படை செய்யும் வரை கால நீட்டிப்பு வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | மத்திய மண்டலம் - வார்டு எண் 82 – என்.எச். ரோட்டில் உள்ள கடையை அன்னூர் சர்வோதய சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 10 | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத் திட்டம் - திடக்கழிவு மேலாண்மை பணி – இரண்டாம் கட்ட குப்பை சேகரிப்புப் பணிகளுக்கு 14 எண்ணிக்கையிலான வாகன கேபின் சேசீஸ்கள் மீது தேவையான ரெப்யூஸ் கலெக்டர் காம்பாக்டர் பாடி கட்டும் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத் திட்டம் - திடக்கழிவு மேலாண்மை பணி – இரண்டாம் கட்ட குப்பை சேகரிப்புப் பணிகளுக்கு 13 எண்ணிக்கையிலான வாகன கேபின் சேசீஸ்கள் சேசீஸ்கள் மீது தேவையான ரெப்யூஸ் கலெக்டர் காம்பாக்டர் பாடி கட்டும் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | பொறியியல் பிரிவு - வார்டுஎண் 48- சங்கனூர் பள்ளத்தில் குறுக்காக கணேஷ் நகர் மற்றும் காந்திபுரம் 5-வது வீதியினை இணைக்கும் பகுதியில் பாலம் கட்டுதல்-ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | மேற்கு மண்டலம் - ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி – 17 வணிக வளாக கடைகளுக்கு உரிமம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நாள் முதல் 06.07.2011 ம் தேதி முடிய உள்ள காலங்களுக்கு நிலுவை வாடகைத் தொகை தள்ளுபடி செய்தல் - மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் முதல் நிலுவை வாடகைத் தொகை வசூலித்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு |

| | |
|---|---|
| | தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **14** | மேற்கு மண்டலம் -2012-15 ம் ஆண்டிற்கான குத்தகை உரிம இனங்கள் - உரிமம் ஒப்படை செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **15** | மேற்கு மண்டலம் - ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் இருசக்கர வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - 5 சதவீதம் உயர்வு செய்த தொகைக்கு சரி செய்தல் மற்றும் மீதமுள்ள தொகையை வசூல் செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **16** | மேற்கு மண்டலம் - எம்.ஜி,ஆர். தினசரி மொத்த காய்கறி மார்க்கெட் - மாதாந்திர உரிமக் கட்டணம் குறைவு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது தொடர்பாக |
| **17** | மேற்கு மண்டலம் - 2012-15 ம் ஆண்டிற்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது – உயர்ந்த பட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று ஒப்படை செய்தல் மற்றும் மறு ஏலம் கோருதல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **18** | கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது – உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று ஒப்படை செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **19** | கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - சிங்காநல்லூர் பேருந்து நிலைய பேருந்து நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது – உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று ஒப்படை செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **20** | கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது – பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி மாதாந்திர வாடகையை செலுத்துவதற்கு ஒப்புக் கொள்ளும் உரிமதாரர்களுக்கு ஒப்படை செய்தல் - ஒப்புக்கொள்ளாத வாடகைதாரர்களின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் நடத்துதல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **21** | கிழக்கு மண்டலம் - இராமகிருஷ்ணாபுரம் வணிக வளாகக் கடை எண் 1 மற்றும் 2 – மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது – உயர்ந்த பட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று ஒப்படை செய்தல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **22** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - தெருவிளக்குகளை மூன்றாண்டு காலத்திற்கு பராமரித்தல் பணி – புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பணியை ஒப்படைக்கும் காலம் வரை ஏற்கெனவே பணியை மேற்கொண்டுவரும் தி/ள். சால்ஜா் நிறுவனத்தாருக்கு கால நீட்டிப்பு வழங்குதல் மற்றும் செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **23** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - தெருவிளக்குகளை மூன்றாண்டு காலத்திற்கு பராமரித்தல் பணி – புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பணியை ஒப்படைக்கும் காலம் வரை ஏற்கெனவே பணியை மேற்கொண்டுவரும் தி/ள். சால்ஜா் நிறுவனத்தாருக்கு கால நீட்டிப்பு வழங்குதல் மற்றும் செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **24** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - தெருவிளக்குகளை மூன்றாண்டு காலத்திற்கு பராமரித்தல் பணி – புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பணியை ஒப்படைக்கும் காலம் வரை ஏற்கெனவே பணியை மேற்கொண்டுவரும் தி/ள். சால்ஜா் நிறுவனத்தாருக்கு கால நீட்டிப்பு வழங்குதல் மற்றும் செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **25** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - தெருவிளக்குகளை மூன்றாண்டு காலத்திற்கு பராமரித்தல் பணி – புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பணியை ஒப்படைக்கும் காலம் வரை ஏற்கெனவே பணியை மேற்கொண்டுவரும் தி/ள். சால்ஜா் நிறுவனத்தாருக்கு கால நீட்டிப்பு வழங்குதல் மற்றும் செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **26** | பொது சுகாதாரப் பிரிவு - கொசு ஒழிப்பு பணிக்காக தற்காலிகமாக 200 பணியாளர்களை தனியார் மூலம் நியமனம் செய்தல் மற்றும் செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **27** | பொது சுகாதாரப் பிரிவு - கொசு ஒழிப்பு திட்டம் - கொசுப் புகை மருந்தடிக்கும் இயந்திரங்கள் வாங்குதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |

நன்றியுரை

**அ)** **திருக்குறள்**

வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.

**(குறள் - 646)**

**விளக்கம்**

பிறர் விரும்பிக்கேட்டு மனத்தில் கொள்ளும்படி இனிக்கச் சொல்லி, மற்றவர் சொல்வதில் இருக்கும் ஆழமான நுட்பங்களைக் கண்டறிவதே மாசு நீங்கிய சிறப்புடையவர்களின் கோட்பாடு.

**திருவள்ளுவர்.**

---

**ஆ)** **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 26 நாள் 25.05.2012

********

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 3 ல் உள்ள சுப்பிரமணியம் பாளையத்தில் மாநகராட்சி சொந்தமான இடத்தில் 16.00 இலட்சம் செலவில் 10x16 என்ற அளவில் ஐந்து கடைகளுடன் கூடிய தரை தள வணிக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு உபயோகிக்க தயார் நிலையில் உள்ளது என உதவி பொறியாளர் தனது 07.05.2012 ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே இக்கடைகளை பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் இக்கடைகளுக்கான ஏலத்தில் கலந்து கொள்பவருக்கு கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஏல வைப்பு தொகை மற்றும் காப்பு தொகை நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 26 நாள் 25.05.2012–ல் ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | இனம் | தொகை |
|---|---|---|
| 1 | ஏல வைப்பு தொகை | ரூ 25,000/– |
| 2 | ஏல காப்பு தொகை | ரூ 25,000/– |
| 3 | வங்கி உறுதிச்சான்று தொகை | ரூ 1,00,000/– |
| 4 | வங்கி உறுதிச்சான்று இல்லாதோர் செலுத்த வேண்டிய தொகை | ரூ 25,000/– |

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 06508/2012/ ஏ12

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 36 நாள் 30.05.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 26 நாள் 25.05.2012 ஐ அனுமதிக்கக் கோரும் அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 27 நாள் 25.05.2012.

********

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 31 ல் உள்ள விளாங்குறிச்சி ரோட்டில் மாநகராட்சி சொந்தமான இடத்தில் 15.00 இலட்சம் செலவில் ஆறு கடைகளுடன் கூடிய தரை தள வணிக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு உபயோகிக்க தயார் நிலையில் உள்ளது . இதில் 1,2,4,5,6 ஆகிய ஐந்து கடைகள் 10x16 என்ற அளவிலும் கடை எண் மூன்று மட்டும் 452 சதுர அடி என்ற அளவிலும் கட்டப்பட்டுள்ளது என உதவி பொறியாளர் தனது 11.05.2012 ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே இக்கடைகளை பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் இக்கடைகளுக்கான ஏலத்தில் கலந்து கொள்பவருக்கு கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஏல வைப்பு தொகை மற்றும் காப்பு தொகை நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 27 நாள் 25.05.2012–ல் ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | இனம் | தொகை |
|---|---|---|
| 1 | ஏல வைப்பு தொகை | ரூ 25,000/– |
| 2 | ஏல காப்பு தொகை | ரூ 25,000/– |

| | | |
|---|---|---|
| 3 | வங்கி உறுதிச்சான்று தொகை | ரூ 1,00,000/– |
| 4 | வங்கி உறுதிச்சான்று இல்லாதோர் செலுத்த வேண்டிய தொகை | ரூ 25,000/– |

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.06509/2012/ ஏ12

**மாநகர மன்ற தீர்மானம் எண் 37 நாள் 30.05.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 27 நாள் 25.05.2012 ஐ அனுமதிக்கக் கோரும் அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பார்வை - வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 40 நாள் 25.05.2012 .

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனமான துடியலூர் வாரச்சந்தையினை 01.04.2011 முதல் 31.03.2012 வரை துடியலூர் பேரூராட்சி மூலம் ரூ.13,23,000/-க்கு உரிமம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இவ்வினமானது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு இங்கு வசூலிக்கப்படும் கட்டண விகிதங்கள் மாமன்றத்தின் அனுமதியுடன் உயர்வு செய்யப்பட்டுள்ளது. இதனால் சென்ற ஆண்டுத் தொகையினைக் காட்டிலும் கூடுதலாக ரூ.17,00,000/- அரசு மதிப்பாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 2012-2015-ம் வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஒப்படை செய்வதற்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.12, 21.03.12, 28.03.12, 11.04.12 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது. இதில் 14.03.2012ஆம் தேதிய ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. அதன்பின் நடைபெற்ற ஏலங்களில் உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக முறையே ரூ.6,66,000/- ரூ.9,12,666/- ரூ.9,51,000/- என்ற அடிப்படையில் ஏலம் கோரப்பட்டது. இத்தொகையானது அரசு மதிப்பினைக் காட்டிலும் குறைவாக உள்ளதால் இவ்வினத்திற்கு ஐந்தாவது முறையாக மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 25.04.2012 ஆம் தேதியில் நடத்தப்பட்டது. இதில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

| வ எண் | இனம் | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச ஏல கோரிக்கை ஒப்பந்தப்புள்ளி ரூ. | சென்ற ஆண்டு தொகை ரூ. | மூன்று ஆண்டு சராசரி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | துடியலூர் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1. எஸ்.மாணிக்கம்<br>2. ஜெகநாதன்<br>3. எம்.ஏ.கலில்ரகுமான்<br>4. நாச்சிமுத்து<br>5. சி.ரெங்கராஜன் | 7,00,000/-<br>5,25,000/-<br>8,88,000/-<br>6,85,000/-<br>**10,07,000/-**<br>(மூன்று ஆண்டு சராசரியினைக் காட்டிலும் 17% குறைவு) | 13,23,000/- | 12,15,966/- |

மேற்படி ஏலதாரர்களில் திரு.சி.ரெங்கராஜ் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.10,07,000/-க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளார். இத்தொகையானது சென்ற ஆண்டு உரிமத் தொகையினைக் காட்டிலும் குறைவாகவும் மூன்று ஆண்டு சராசரியினைக் காட்டிலும் 17சதவிகிதம் குறைவாகவும் உள்ளது.

இவ்வினத்திற்கு தொடர்ந்து ஐந்து முறை ஏலம் விடப்பட்டும் சென்ற ஆண்டு ஏலத் தொகை மற்றும் மூன்று ஆண்டு சராசரியினைக் காட்டிலும் குறைவாகவே ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள ஏல இனமானது சென்ற ஆண்டு வரை பேரூராட்சி மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வினத்திற்கு பேரூராட்சியில் உரிமத்தொகையினை பனிரெண்டு மாதங்களாக பிரித்து மாதாந்திர அடிப்படையில் வசூல் செய்துவரப்பட்டுள்ளது. தற்பொழுது மாநகராட்சி நடைமுறைகளின்படி ஏலத்தொகை முழுவதுமாக செலுத்திய பின்னரே உரிமம் ஒப்படை செய்யபப்படுகிறது. மேலும், நடப்பு ஆண்டு முதல் மத்திய அரசுக்கு செலுத்தவேண்டிய சேவை வரியும் உரிமதாரரால் செலுத்தப்பட வேண்டுயுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களால் ஏலதாரர்கள் சென்ற ஆண்டு தொகை மற்றும் மூன்று ஆண்டு சராசரியினைக் காட்டிலும் குறைவாகவே ஏலம் கோரியுள்ளனர். மேலும், மேற்படி வாரச்சந்தையினை துறை மூலம் வசூல் செய்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் துறை மூலம் வசூல் செய்யப்படும் சமயத்தில் பணியாளர்கள் ஊதியம் மற்றும் ரசீது புத்தகங்கள் அச்சிடும் செலவு ஆகிய செலவீனங்கள் மாநகராட்சிக்கு கூடுதலாக ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, மேற்படி இனத்திற்கு ஐந்து முறை ஏலம் விடப்பட்டுள்ள காரணத்தாலும் தற்பொழுது பெறப்பட்டுள்ள உயர்ந்த பட்ச ஏலத்தொகையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்வது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண். 40 நாள் 25.05.2012 –ல் மேற்படி உயர்ந்த பட்ச ஏலக் கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்வதற்கு மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் - 903/2012/அ1(வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 38 நாள் 30.05.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 40 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

**பொருள்:-** கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் அருகில் தரைதளத்தில் கடை எண்.1 –உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஓதுக்கீடு செய்தல் - தொடர்பாக.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட கீழ் காணும் குத்தகை இனத்திற்கு 25.04.2012 அன்று நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | குத்தகை இனத்தின் பெயர் | அரசாங்க மதிப்பீட்டுத் தொகை மாத வாடகை ரூ. | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ. | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் அருகில் தரைதளத்தில் கடை எண்.1 | 73,700/- | திரு.எம்.எ. கலீல்ரஹ்மான் | 79,000/- | ஒப்பந்தப்புள்ளி |

**கடை எண்.1க்கு** அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது. மத்திய கலால் துறைக்கு செலுத்த வேண்டிய சேவை வரி செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி கடைக்கு பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ஏற்று ஒப்படை செய்திட வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில் 25.05.12-ம் தேதிய தீர்மான எண்.35-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்குப் பரிந்தரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/2010/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 39 நாள் 30.05.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 35 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

| | |
|---|---|
| **பொருள்:-** | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.81 சி.எம்.சி காலனியில் (வெரைட்டி ஹால் சாலை அருகில்) உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடத்தை பொதுமக்கள் உபயோகப்படுத்தும் வகையில் வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக. ------- |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.81 சி.எம்.சி காலனி , வெரைட்டி ஹால் சாலை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 5350.20 சதுரடி பரப்பளவுள்ள சமுதாய கூடம் ரூ. 3,13,10,408/- செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி சமுதாய கூடத்திற்கு

பொதுப்பணித்துறை மதிப்பாக ஒரு சதுர அடிக்கு **ரூ.58.52/-** வீதம் மொத்தம் 5350.20 சதுரடிக்கு நாள் ஒன்றுக்கு **ரூ.10,436.80/-** என உதவி பொறியாளர் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சமுதாய கூடத்தை பொது மக்களின் பயன்பாட்டிற்காக **நாள் ஒன்றிற்கு வாடகை ரூ.10,500/- வைப்பு தொகை ரூ.3,000/-**ம் என நிர்ணயம் செய்யவும் மத்திய மாநில அரசு துறைகளான வருமானவரித்துறை, கலால்வரித்துறை மற்றும் இதர துறைகளால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின்படி சேவை வரி, இதர வரி கட்டணம் மற்றும் மின்சார செலவினங்கள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் சமுதாய கூடத்தை பொது மக்களின் பயன்பாட்டிற்கு அனுமதிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில் 25.05.12-ம் தேதிய தீர்மான எண்.36-ல் மாமன்றத்தின் முடிவிற்கு அனுப்ப தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண். 4652/2012/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 40 நாள் 30.05.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 36 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82-ல் N.H. ரோட்டில் விக்டோரியா ஹால் மேற்கில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரண்டு கடைகள் மின் ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82-ல் N.H. ரோட்டில் உள்ள விக்டோரியா ஹால் மேற்கில் இரண்டு கடைகள் புதியதாக கட்டப்பட்டுள்ளது.

மேற்படி கடைகளை மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப் பணிதுறை வாடகை மதிப்பின் படி வாடகை நிர்ணயம் செய்திட உதவி பொறியாளரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | கடை எண் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.82-ல் N.H. ரோட்டில் விக்டோரியா ஹால் மேற்கில் இரண்டு கடைகள். | 1<br>2 | 128.04<br>128.04 | 110.34<br>110.34 | 14,128/-<br>14,128/- |

மின் ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை ஆகியவைகளை நிர்ணயம் செய்யவும் மற்றும் செய்தித்தாளின் விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் பொருள் வைக்கப்பட்டத்தில் 25.05.12-ம் தேதிய தீர்மான எண்.37-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்குப் பரிந்தரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

வைப்புத்தொகை (பத்து மாத வாடகை) - ரூ.1,40,000/-
காப்புத்தொகை - ரூ. 50,000/-

சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது
வங்கி உறுதி சான்றிதழ் - ரூ.3,00,000/-

சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக
செலுத்த வேண்டிய தொகை - ரூ.1,00,000/-

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 3765/2012/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 41 நாள் 30.05.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 37 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட 2012-2015-ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் மற்றும் தங்கும் விடுதியை ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட கீழ் காணும் குத்தகை இனங்களுக்கு முதல் மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012-ம் அதனைத் தொடர்ந்து 21.03.2012, 29.03.2012, 11.04.2012, 25.04.2012ல ஆகிய தேதிகளிலும் ஆறாவது முறையாக 10.05.2012ல் கோரப்பட்டது இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை கோரிய விவரம் பின்வருமாறு.

| வ. எண் | இனம் | அரசு மதிப்பு வருடத்திற்கு (ரூ) | மூன்றாண்டு சராசரி தொகை (ரூ) | 10.05.2012. நடைபெற்ற ஏலத்தில்பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | சக்திரோடு ஆம்னி பேருந்து நிலையத்தினுள் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 12,95,000/- (2011-12 ஏலத் தொகை - 12,33,000/-) | ரூ.11,48,663/- | திரு.என். செந்தில் குமார் ரூ.10,50,000/- |
| 2 | நவீன கட்டணக் கழிப்பிடம் காந்திபுரம் நகர பேருந்து நிலையம் (ஆர்.வி.ஹோட்டல் எதிரில்) | 8,30,300/- (2011-12 ஏலத் தொகை - 7,90,755/-) | ரூ.7,56,315/- | திரு.கே. முனியாண்டி ரூ.6,11,100/- |
| 3 | சீனிவாசபுரம் கிராஸ்கட் ரோட்டில் உள்ள இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் | 26,58,000/- (2011-12 ஏலத் தொகை - 25,31,500/-) | ரூ.25,92,456 /- | திரு.K.ஜனார்த்தனன் ரூ.30,02,000/- - |
| 4 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி (தளம் எண்.1 முதல் மாடியில் அறை எண். 4ஐத் தவிர) | 25,25,000/- | - | திரு.இரா.செந்தில்வேல் ரூ.26,76,000/- - |

வரிசை எண்.1

அரசு மதிப்பை காட்டிலும் ரூ.2,45,000/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரி தொகையை காட்டிலும் ரூ.98,663/- குறைவாகவும் ஏலகோரிக்கை பெறப்பட்டுள்ளது. ஒருவர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டார்.

வரிசை எண்.2

அரசு மதிப்பை காட்டிலும் ரூ.2,19,200/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரி தொகையை காட்டிலும் ரூ.1,45,215/- குறைவாகவும் ஏலகோரிக்கை பெறப்பட்டுள்ளது.

<u>வரிசைஎண்.3</u>

அரசு மதிப்பு காட்டிலும் கூடுதலான ஏலத்தொகை ரூ.30,02,000/-கோரிய திரு.K.ஜனார்த்தனன் அவர்களுக்கு மத்திய கலால் துறைக்கு செலுத்த வேண்டிய சேவை வரி செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்படைக்கலாம்.

<u>வரிசைஎண்.4</u>

அரசு மதிப்பு ரூ.25,25,000/-ஐ காட்டிலும் கூடுதலான ஏலத்தொகை ரூ.26,76,000/-கோரிய திரு.இரா.செந்தில்வேல் அவர்களுக்கு மத்திய கலால் துறைக்கு செலுத்த வேண்டிய சேவை வரி செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்படைக்கலாம்.

(அ)
வரிசை எண். 1 மற்றும் 2க்கு 6வது ஏலத்திலும் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. தொடர் இழப்பினை தவிர்க்க ஏல இனத்தை ஒப்படைக்க வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

(ஆ)
வரிசை எண். 3 மற்றும் 4க்கு அரசு மதிப்பயை காட்டிலும் கூடுதலான ஏலத்தொகை கோரிக்கை பெறப்பட்டுள்ளது எனவே அவ்வினங்களை ஒப்படைக்கலாம்.

(அ) வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிசீலனைக்கு மற்றும் (ஆ) ஒப்புதல் அளிக்கலாம் என வரி விதிப்பு மற்றும் நிதிகுழுவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில் 25.05.12-ம் தேதிய தீர்மான எண்.39-ல் வரிசை எண்.1,2,3 மற்றும் 4-ல் உள்ள இனங்களுக்கு உயர்ந்தசபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய மாமன்றத்திற்குப் பரிந்தரை செய்து தீர்மானிக்கபட்டதை மன்றத்தின் ஒப்பதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/2010/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 42 நாள் 30.05.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 39 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

**பொருள்** - கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட குத்தகை இனங்களுக்கு நீட்டிப்பு வழங்குவது – தொடர்பாக

**பார்வை** - மாமன்றத் தீர்மான எண்.9 நாள்27.04.2012

----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட கீழ் காணும் குத்தகை இனங்களுக்கு நடை பெற்ற மின் ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் 14.03.2012, 21.03.2012, 29.03.2012 .மற்றும் 11.04.2012 ஆகிய தேதிகளிலும் ஐந்தாவது முறையாக 25.04.2012-ல் கோரப்பட்டு அரசு மதிப்பைக்காட்டிலும் குறைவாகவே ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது. இதனால் இவ்வினங்களுக்கு மறுஏலம் நடத்துவதற்கு கோப்பு நடவடிக்கையில் உள்ளது. இவ்வினங்களை 31.03.2012-ம் அன்று ஒப்படை செய்ய இயலவில்லை.

2011-2012-ம் ஆண்டின் ஏலத்தொகையில் 5% கூடுதலாக செலுத்தி இசைவு கடிதம் கொடுத்த கீழ் கண்ட முந்தைய குத்தகைதாரர்களுக்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பின்னேற்பாக மாமன்றத் தீர்மான எண்.9 நாள்27.04.2012-ல் ஒப்புதல் பெறப்பட்டது.

கீழ் காணும் குத்தகை இனங்களுக்கு 2011-2012-ம் ஆண்டின் ஏலத்தொகையில் 5% உயர்வுசெய்து ஒரு மாத காலம் 01.05.2012 முதல் 31.05.2012 வரை நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | 2011-12-ம் ஆண்டு ஏலத்தொகை (ரூ) | 2011-12-ம் ஆண்டு ஏலத்தொகையில் 5% கூடுதலாக கணக்கீட்டு ஒரு மாதத்திற்கு செலுத்திய தொகை (ரூ) | முந்தைய ஏலத்தாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | சீனிவாசாபுரம் கிராஸ்கட் ரோட்டில் உள்ள இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் | 25,31,500/- | 2,21,506/- | திரு.S.ரமேஷ் |
| 2 | சக்திரோடு ஆம்னி பேருந்து நிலையத்தினுள் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 25,31,500/- | 1,07,887/- | திரு.V.M.ரநாச்சிமுத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | நவீன கட்டணக் கழிப்பிடம் காந்திபுரம் நகர பேருந்து நிலையம் (ஆர்.வி.ஹோட்டல் எதிரில்) | 25,31,500/- | 69,197/- | திரு.K.முனியான்டி |
| 4 | சக்தி ரோடு புல்மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,82,700/- | 15,987/- | திருமதி. என். ஜோதிமணி, |

மே மாதம் உரிமம் நீட்டிப்பு வழங்கியமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டியும், பொது ஏலம் நடத்தி ஒப்படை செய்யும்வரை மேற்படி இனங்களுக்கு கால நீட்டிப்பு வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டியும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/2010/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 43 நாள் 30.05.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 9

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82-ல் N.H. ரோட்டில் உள்ள கடையை அன்னூர் சர்வோதய சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82-ல் N.H. ரோட்டில் உள்ள கடையை அன்னூர் சர்வோதய சங்கம் காதி கிராமோத்யாக் பவன், கோவை கிளைக்கு ஒதுக்கீடு செய்து தருமாறும் அதற்குரிய வாடகை மற்றும் முன்பணம் தொகையினை செலுத்திடவும் தயாராக உள்ளோம் என அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பொதுப் பணித்துறை வாடகை மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்திட உதவி பொறியாளரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்கண்டவாறு வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | கடை எண் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.82-ல் N.H. ரோட்டில் உள்ள கடை | 1 | 210.00 | 63.00 | 13,230/- |

எனவே மேற்படி அரசாங்க மாத வாடகை மதிப்பின் அடிப்படையில் முன்பணம் தொகை ரூ.1,40,000/-(பத்து மாத வாடகை)யினை செலுத்தி அன்னூர் சர்வோதய சங்கம் காதி கிராமோத்யாக் பவன், கோவை கிளைக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் பொருள் வைக்கப்பட்டத்தில் 25.05.12-ம் தேதிய தீர்மான எண்.38-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்குப் பரிந்தரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம்.
வணக்கத்திற்குரிய மேயர் குறிப்பு - பின்னர் பரிசீலிக்கலாம் ந.க.எண். 3765/2012/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 44 நாள் 30.05.2012</u>**

பொருளில் குறிப்பிட்டுள்ள கடையை ஒதுக்கீடு செய்வது குறித்து பின்னர் பரிசீலிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (IUDM) கீழ் திடக்கழிவு மேலாண்மைக்காக எடுக்கப்பட்ட பல்வேறு பணிகளை ரூ.1300.00 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

ந.க.எண். 47923/2011/E3 நாள் 01-02-2012 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் சிப்பம்-2 ன் கீழ் இரண்டாம் கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 14 எண்ணிக்கையிலான ரெப்யூஸ் கலெக்டர் காம்பாக்டர் லாரிகள் கொள் முதல் செய்யும் பணிக்கு ரூ.280.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.127 நகராட்சி நிர்வாகம் மற்றும் வழங்குத் துறை (மா.நா.3) நாள்:17-07-1998 ல் துப்புரவு, குடிநீர் விநியோகம், சாக்கடை கழிவு நீர் அகற்றுதல் போன்ற பணிகளுக்கு ஏற்ற முறையில் எந்த வகையான வாகனங்கள் தேவை என்பதை நகராட்சி/மாநகராட்சி மன்றங்கள் தீர்மானம் செய்த பின்னர் தயாரிப்பாளர்களிடமிருந்தோ அல்லது சமீபத்திலுள்ள அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடமிருந்தோ DGS & D அங்கீகரித்த விலை அல்லது அதற்கு குறைவான விலையில் வாங்கி அவற்றின் மீது மேற்கூண்டு (BODY) கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண்.285 உள் (போக்குவரத்து-IV) துறை நாள்:13-05-2005ல் மேற்படி அரசுத்துறைகள் வாகனங்களை வாங்கும் பொழுது DGS & D விலை இல்லாத பட்சத்தில் அரசிடம் சிறப்பு விலக்கு அனுமதி பெற்று வாங்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிப்பம்-2 ன் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணியின் ஒரு பகுதியான 14 எண்ணிக்கையிலான வாகன கேபின் சேசீஸ்களை வாகன தயாரிப்பாளர்களிடம் கொள்முதல் செய்ய கீழ் கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது :

| வ. எண் | வாகனத்தின் விபரம் | எண்ணிக்கை | ஒரு வாகனத்தின் விலை (ரூபாயில்) | மொத்த விலை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | TATA Make LPT 909 EX2/34 Cabin Chassis with PTO - BS-III (அரசுத்துறைகளுக்கான சிறப்பு விலை) | 14 | 9,57,000.00 | 133,98,000.00 |
| 2 | ASHOK LEYLAND Make Ecomet 1012 - 3970 mm WB Cabin Chassis with PTO - BS-III (அரசுத்துறைகளுக்கான சிறப்பு விலை) | 14 | 9,58,543.00 | 134,19,602.00 |
| 3 | EICHER Make Eicher 10.90 Cabin with Chassis on 3765 mm Wheel Base – BS-III Compliance with PTO (டி.ஜி.எஸ் & டி விலை) | 14 | 9,28,058.00 | 129,92,812.00 |

ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 30-04-2012 அன்று கூடி மேற்கூறிய பொருளினை விவாதித்து மேற்கண்ட பட்டியலில் வரிசை எண். 1 மற்றும் 2 ஆகியவற்றில் கண்ட வாகன கேபின் சேசீஸ்களின் தயாரிப்பாளர்களான தி/ள். TATA Motors Limited, Chennai மற்றும் தி/ள். Ashok Leyland Limited, Chennai ஆகிய நிறுவனத்தாரிடம் அவர்களது தயாரிப்பிலான வாகன வகைகளுக்கு DGS&D அங்கீகரித்த விலை இல்லையெனவும் அந்நிறுவனத்தினரிடம் அரசுத்துறைகளுக்கான சிறப்பு விலை உள்ளதெனவும், வரிசை எண். 3-ல் கண்ட வாகன கேபின் சேசீஸ்களின் தயாரிப்பாளர்களான தி/ள்.V.E. Commercial Vehicles Limited, Chennai நிறுவனத்திடம் மட்டுமே DGS&D அங்கீகரித்த விலை உள்ளதால் இம்மாநகராட்சிக்கு தேவைப்படும் 14 எண்ணிக்கையிலான வாகன கேபின் சேசீஸ்களை தி/ள்.V.E. Commercial Vehicles Limited, Chennai நிறுவனத்திடம் ரூ.129,92,812/-ஐ முன் பணம் செலுத்தி நேரிடையாக கொள் முதல் செய்யலாமென பரிந்துரை செய்துள்ளதை ஆணையர் அனுமதித்ததுடன் மாமன்றத்தின் தகவலுக்கு வைக்க குறிப்பு வழங்கியுள்ளார். எனவே இரண்டாம் கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு எந்த வகையான வாகன கேபின் சேசீஸ்களை வாங்க வேண்டும் என்பதனை மாமன்றத்தின் முடிவின் பேரில் வாங்கிக்கொள்ளலாம்.

அரசாணை (நிலை) எண்.127 நகராட்சி நிர்வாகம் மற்றும் வழங்குத் துறை (மா.நா.3) நாள்:17-07-1998ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி சிப்பம் -2 ன் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணியின் மற்றொரு பகுதியான இம்மாநகராட்சியால் வாங்கப்படும் 14 எண்ணிக்கையிலான வாகன கேபின் சேசீஸ்களின் மீது தேவையான ரெப்யூஸ் கலெக்டர் காம்பாக்டர் பாடி கட்டும் (Refuse Collector Compactor Body Building Works) பணிக்கு கடந்த 09-04-2012 ல் இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender process) கோரப்பட்டதில் (முதல் அழைப்பு) கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்கள் அவர்களது ஒப்பந்தப்புள்ளிகளை கொடுத்திருந்தினர்.

1) தி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே
2) தி/ள்.டி.பி.எஸ். இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட், புது தில்லி.
3) தி/ள்.என்.எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை.

மேலே படிக்கப்பட்ட மூன்று நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப பிரேரனைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 30-04-2012 அன்று கூடி விவாதித்து வரிசை எண்கள் 1 மற்றும் 2 ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள இரண்டு நிறுவனத்தினர் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறவில்லையெனவும், வரிசை எண் 3 ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் மட்டுமே தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும் அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறையினை திறக்கலாமென பரிந்துரை செய்துள்ளதை ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து தகுதி பெற்ற நிறுவனமான தி/ள்.என்.எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறை 15-05-2012 அன்று திறக்கப்பட்டதில் மேற்கூறிய நிறுவனம் ரூ.1,60,53,086/- க்கு மதிப்பீட்டை விட 5.1972 % அதிகம் கொடுத்திருந்தனர். ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 16-05-2012 அன்று கூடி விவாதித்து அந்நிறுவனத்திடம் விலை குறைப்பு செய்து கொடுக்க கேட்கலாமென பரிந்துரை செய்தததனைத் தொடர்ந்து மேற்படி நிறுவனம் அவர்களது 18-05-2012 தேதியிட்ட கடிதத்தில் அவர்களது ஒப்பந்தப்புள்ளி விலையினை ரூ.1,60,53,086/- லிருந்து ரூ.1,60,16,000/- க்கு விலை குறைப்பு செய்து கொடுக்க இசைவு தெரிவித்தனர். விலை குறைப்பிற்குப் பின்னர் மேற்கூறிய நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.954 % அதிகமாகும்.

இதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 21-05-2012 அன்று கூடி விவாதித்து மேற்கூறிய பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை சேவைப் பணிகள் திறன்பட செய்ய வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் பெற வாய்ப்பு இருக்காதெனவும் கருத்துரை வழங்கியதுடன்

தி/ள்.என்.எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை நிறுவனத்தார் ரூ.1,60,16,000/- க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னர்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.954 % கூடுதலாகவுள்ளதால் பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கலாமென பரிந்துரை செய்துள்ளது.

எனவே ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சிப்பம்-2 ன் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணியின் ஒரு பகுதியான இரண்டாம் கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு எந்த வகையான வாகன கேபின் சேசீஸ்களை வாங்க வேண்டும் என்பதனை இம்மாமன்றத்தின் முடிவின் பேரில் வாங்கிக்கொள்ளவும், இதே சிப்பத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணியின் மற்றொரு பகுதியான இம்மாமன்ற முடிவின் பேரில் வாங்கப்படும் 14 எண்ணிக்கையிலான வாகன கேபின் சேசீஸ்களின் மீது தேவையான ரெப்யூஸ் கலெக்டர் காம்பாக்டர் பாடி கட்டும் (Refuse Collector Compactor Body Building Works) பணிக்கு தி/ள்.என்.எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை நிறுவனத்தார் ரூ.1,60,16,000/- க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னர் மதிப்பீட்டை விட 4.954 % அதிகம்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றத்தின் முடிவிற்கும் மற்றும் அனுமதிக்கும்

ந.க.எண். 3395/2012/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 45 நாள் 30.05.2012</u>**

இரண்டாம் கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவைப்படும் 14 எண்ணிக்கைகள் TATA கேபின் சேஸிஸ்களை அதன் தயாரிப்பாளர்களான தி/ள் TATA Motors Limited, Chennai நிறுவனத்திடம் ரூ. 1,33,98,000/- முன்பணம் செலுத்தி அரசுத் துறைகளுக்கான சிறப்பு விலையில் வாங்கிக் கொள்ள அரசின் சிறப்பு விலக்கு பெறவும்,

மேற்கூறிய 14 எண்ணிக்கைகள் TATA கேபின் சேஸிஸ்களின் மீது தேவைப்படும் ரெப்யூஸ் கலெக்டர் காம்பாக்டர் பாடி கட்டும் பணிக்கு தி/ள் என்.எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை நிறுவனத்தார் கொடுத்துள்ள ரூ. 1,60,16,000/- க்கான (விலைக்குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டைவிட 4.954% அதிகம்) ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கும் ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (IUDM) கீழ் திடக்கழிவு மேலாண்மைக்காக எடுக்கப்பட்ட பல்வேறு பணிகளை ரூ.1300.00 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண். 47923/2011/E3 நாள் 01-02-2012 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் சிப்பம்-1 ன் கீழ் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 13 எண்ணிக்கையிலான சிறிய வகை டிப்பர் லாரிகள் கொள் முதல் செய்யும் பணிக்கு ரூ.97.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.127 நகராட்சி நிர்வாகம் மற்றும் வழங்குத் துறை (மா.நா.3) நாள்:17-07-1998 ல் துப்புரவு, குடிநீர் விநியோகம், சாக்கடை கழிவு நீர் அகற்றுதல் போன்ற பணிகளுக்கு ஏற்ற முறையில் எந்த வகையான வாகனங்கள் தேவை என்பதை நகராட்சி/மாநகராட்சி மன்றங்கள் தீர்மானம் செய்த பின்னர் தயாரிப்பாளர்களிடமிருந்தோ அல்லது சமீபத்திலுள்ள அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடமிருந்தோ DGS & D அங்கீகரித்த விலை அல்லது அதற்கு குறைவான விலையில் வாங்கி அவற்றின் மீது மேற்கூண்டு (BODY) கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண்.285 உள் (போக்குவரத்து-IV) துறை நாள்:13-05-2005ல் மேற்படி அரசுத்துறைகள் வாகனங்களை வாங்கும் பொழுது DGS & D விலை இல்லாத பட்சத்தில் அரசிடம் சிறப்பு விலக்கு அனுமதி பெற்று வாங்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிப்பம்-1 ன் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணியின் ஒரு பகுதியான 13 எண்ணிக்கையிலான வாகன கேபின் சேசீஸ்களை வாகன தயாரிப்பாளர்கள் மற்றும் சமீபத்திலுள்ள அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடமிருந்து கொள்முதல் செய்ய கீழ் கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது :

| வ. எண் | வாகனத்தின் விபரம் | எண்ணிக்கை | ஒரு வாகனத்தின் விலை (ரூபாயில்) | மொத்த விலை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | TATA Make “ACE” Model Mini Truck Chassis with Cabin, without PTO & Rear Cargo box confirming to BS III standards (அரசுத்துறைகளுக்கான சிறப்பு விலை) | 13 | 3,11,672.00 | 40,51,736.00 |
| 2 | PIAGGIO Make “APE” Model Mini Truck Chassis with Cabin, without PTO & Rear Cargo box confirming to BS III standards (அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரின் விலை) | 13 | 3,09,357.00 | 40,21,641.00 |
| 3 | MAHINDRA Make “MAXIMO” Model Mini Truck Chassis with Cabin & Rear Cargo box, without PTO confirming to BS III standards (அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரின் விலை) | 13 | 3,66,388.00 | 47,63,044.00 |
| 4 | ASHOK LEYLAND Make “DOST” Model Mini Truck Chassis with Cabin & Rear Cargo box, without PTO confirming to BS III standards (அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரின் விலை) | 13 | 4,62,488.00 | 60,12,344.00 |

ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 30-04-2012 அன்று கூடி மேற்கூறிய பொருளினை விவாதித்து மேற்கண்ட பட்டியலில் வரிசை எண். 1-ல் கண்ட வாகன கேபின் சேசீஸின் தயாரிப்பாளர்களான தி/ள். TATA Motors Limited, Chennai நிறுவனத்திடம் நிறுவனத்தாரிடம் அவர்களது தயாரிப்பிலான வாகன வகைக்கு DGS&D அங்கீகரித்த விலை இல்லையெனவும் அந்நிறுவனத்தினரிடம் அரசுத்துறைகளுக்கான சிறப்பு விலை மட்டுமே உள்ளதெனவும், வரிசை எண். 2, 3 மற்றும் 4-ல் ஆகியவற்றில் கண்ட தி/ள். Krysttal Motors (P) Limited, Salem, தி/ள். CAI Industries (P) Limited, Coimbatore மற்றும் தி/ள். Amman Auto (P) Limited, Coimbatore ஆகிய அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடம் அவர்களது தயாரிப்பாளர்களின் வாகன வகைகளுக்கு வாகன கேபின் சேசீஸ்களின் விற்பனையாளர் விலை மட்டுமே உள்ளதால் இம்மாநகராட்சிக்கு தேவைப்படும் 13 எண்ணிக்கையிலான வாகன கேபின் சேசீஸ்களை அரசுத்துறைகளுக்கான சிறப்பு விலையில் தி/ள். TATA Motors Limited, Chennai நிறுவனத்திடம் ரூ.40,51,736/-ஐ முன் பணம் செலுத்தி நேரிடையாக கொள் முதல் செய்யலாமென பரிந்துரை செய்துள்ளதை ஆணையர் அனுமதித்ததுடன் மாமன்றத்தின் தகவலுக்கு வைக்க குறிப்பு வழங்கியுள்ளார். எனவே முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு எந்த வகையான வாகன கேபின் சேசீஸ்களை வாங்க வேண்டும் என்பதனை மாமன்றத்தின் முடிவின் பேரில் அரசு அனுமதியுடன் வாங்கிக்கொள்ளலாம்.

அரசாணை (நிலை) எண்.127 நகராட்சி நிர்வாகம் மற்றும் வழங்குத் துறை (மா.நா.3) நாள்:17-07-1998ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி சிப்பம் -2 ன் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணியின் மற்றொரு பகுதியான இம்மாநகராட்சியால் வாங்கப்படும் 13 எண்ணிக்கையிலான வாகன கேபின் சேசீஸ்களின் மீது தேவையான டிப்பர் பாடி கட்டும் (Tipper Body Building Works) பணிக்கு கடந்த 09-04-2012 ல் இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender process) கோரப்பட்டதில் (முதல் அழைப்பு) கீழ்க்கண்ட நான்கு நிறுவனங்கள் அவர்களது ஒப்பந்தப்புள்ளிகளை கொடுத்திருந்தினர்.

1) தி/ள்.எக்செல் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சேலம்.
2) தி/ள்.ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம்.
3) தி/ள்.என்.எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை.
4) தி/ள்.கிரிஸ்டல் மோட்டார்ஸ், சேலம்.

மேலே படிக்கப்பட்ட நான்கு நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப பிரேரனைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 30-04-2012 அன்று கூடி விவாதித்து வரிசை எண்கள் 1, 2 மற்றும் 4 ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள மூன்று நிறுவனத்தினர் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறவில்லையெனவும், வரிசை எண் 3 ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனம் மட்டுமே தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும் அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறையினை திறக்கலாமென பரிந்துரை செய்துள்ளதை ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து தகுதி பெற்ற நிறுவனமான தி/ள்.என்.எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறை 15-05-2012 அன்று திறக்கப்பட்டதில் மேற்கூறிய நிறுவனம் ரூ.59,82,275/- க்கு மதிப்பீட்டை விட 5.787% அதிகம் கொடுத்திருந்தனர். ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 16-05-2012 அன்று கூடி விவாதித்து அந்நிறுவனத்திடம் விலை குறைப்பு செய்து கொடுக்க கேட்கலாமென பரிந்துரை செய்தததனைத் தொடர்ந்து மேற்படி நிறுவனம் அவர்களது 18-05-2012 தேதியிட்ட கடிதத்தில் அவர்களது ஒப்பந்தப்புள்ளி விலையினை ரூ.59,82,275/- லிருந்து ரூ.59,21,500/-க்கு விலை குறைப்பு செய்து கொடுக்க இசைவு தெரிவித்தனர். விலை குறைப்பிற்குப் பின்னர் மேற்கூறிய நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.713% அதிகமாகும்.

இதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 21-05-2012 அன்று கூடி விவாதித்து மேற்கூறிய பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை சேவைப் பணிகள் திறன்பட செய்ய வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் பெற வாய்ப்பு இருக்காதெனவும் கருத்துரை வழங்கியதுடன் தி/ள்.என்.எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை நிறுவனத்தார் ரூ.59,21,500/-க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னர்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.713% கூடுதலாகவுள்ளதால் பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கலாமென பரிந்துரை செய்துள்ளது.

எனவே ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சிப்பம்-1 ன் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணியின் ஒரு பகுதியான முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு எந்த வகையான வாகன கேபின் சேசீஸ்களை வாங்க வேண்டும் என்பதனை இம்மாமன்றத்தின் முடிவின் பேரில் வாங்கிக்கொள்ளவும்,

இதே சிப்பத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணியின் மற்றொரு பகுதியான இம்மாமன்ற முடிவின் பேரில் வாங்கப்படும் 13 எண்ணிக்கையிலான வாகன கேபின் சேசீஸ்களின் மீது தேவையான டிப்பர் பாடி கட்டும் (Tipper Body Building Works) பணிக்கு தி/ள்.என்.எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை நிறுவனத்தார் ரூ.59,21,500/-க்கு (விலைக்குறைப்பிற்குப் பின்னர் மதிப்பீட்டை விட 4.713% அதிகம்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றத்தின் முடிவிற்கும் மற்றும் அனுமதிக்கும்
ந.க.எண். 3393/2012/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 46 நாள் 30.05.2012**

முதற் கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவைப்படும் 13 எண்ணிக்கைகள் TATA கேபின் சேஸிஸ்களை அதன் தயாரிப்பாளர்களான தி/ள் TATA Motors Limited, Chennai நிறுவனத்திடம் ரூ. 40,51,736/- முன்பணம் செலுத்தி அரசுத் துறைகளுக்கான சிறப்பு விலையில் வாங்கிக் கொள்ள அரசின் சிறப்பு விலக்கு பெறவும்,

மேற்கூறிய 13 எண்ணிக்கைகள் TATA கேபின் சேஸிஸ்களின் மீது தேவைப்படும் டிப்பர் பாடி கட்டும் பணிக்கு தி/ள் என்.எஸ். ராமாராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை நிறுவனத்தார் கொடுத்துள்ள ரூ. 59,21,500/- க்கான (விலைக்குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டைவிட 4.713% அதிகம்) ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கும் ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள்: சங்கனூர் பள்ளத்தின் குறுக்காக கணேஷ் நகர் மற்றும் காந்திபுரம் 5வது வீதியினை இணைக்கும் பகுதியில் பாலம் கட்டுதல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 25-05-2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ.எண். | கோப்பு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1619/12/எம். டி.2 | வார்டு எண்.48ல் சங்கனூர் பள்ளத்தின் | 64.50 | 23-04-2012 முதல் அழைப்பு | 1.தி/ள் பி.எஸ்.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் | திரு.ஆர். செல்வராஜ், கோயம்புத்தூர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | குறுக்காக கணேஷ் நகர் மற்றும் காந்திபுரம் 5வது வீதியினை இணைக்கும் பகுதியில் பாலம் கட்டுதல் | | | 6.91% அதிகம்<br>2.தி/ள் என்.பி.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 12.60% அதிகம்<br>3.திருமதி.கே. பங்கஜம் கோயம்புத்தூர் 22.61% அதிகம்<br>4.திரு.ஆர். செல்வராஜ் கோயம்புத்தூர் 2.50% அதிகம் | 2.41% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

அட்டவணையில் உள்ள பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் 2.50 சதவீதம் அதிகம் விலைப்புள்ளி சமர்ப்பித்த திரு.ஆர்.செல்வராஜ், கோயம்புத்தூர் நிறுவனத்திடம் விலைக்குறைவு செய்து தரக் கோரியதில் இந்நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 2.41 சதவீதம் மதிப்பீட்டைக் காட்டிலும் அதிகம் என விலைக் குறைப்பு செய்து கொடுத்துள்ளார்கள். மதிப்பீட்டைக் காட்டிலும் 2.41 கூடுதல் சதவீதம் அளித்துள்ள திரு.ஆர்.செல்வராஜ், கோயம்புத்தூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 1619/2012/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 47 நாள் 30.05.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி 17 வணிக வளாக கடைகளுக்கு உரிமம் ஒதுக்கீடு வழங்கப்பட்ட நாள் முதல் 6.7.2011-ந்தேதி முடிய உள்ள காலங்களுக்கு நிலுவை வாடகை தள்ளுபடி செய்யவும் - மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதி முதல் நிலுவை வாடகை வசூலிக்கவும்- வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது- மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் -தொடர்பாக.

பார்வை :
1. மாமன்ற தீர்மான எண் 210 நாள் 29.12.2011
2. துணை அணையாளர் அவர்களது 10.04.2012ம் தேதிய உத்தரவு
3. உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆர்.எஸ்.புரம் தெற்கு அவர்களது 05.05.2012ம் தேதிய கடிதம்
4. ஆணையாளர் அவர்களது 7.5.2012-ம் தேதிய உத்திரவு

----------------

பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி . ரங்கே கவுடர் வீதியிலுள்ள நவீன மலர் அங்காடி 19 கடைகளுக்கு 29.12.2011-ம் தேதி உரிமம் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. மேற்படி கடை உரிமைதாரர்கள் செப்டம்பர் 2011 மாதம் முதல் நிலுவை வாடகை செலுத்துவதாக தெரிவித்துள்ளனர்.

பார்வை 2-ல் காணும் துணை ஆணையாளர் அவர்களது 10.04.2012ம் தேதிய குறிப்பின் படி மேற்படி கடைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதி அதற்குரிய கேட்பு ஆகிய விபரம் தெரிவிக்க கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை 3-ல் காணும் உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களது கடிதத்தின் படி மேற்படி கடைகளுக்கு 07.07.2011 முதல் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி கடைகளுக்கு நிலுவை வாடகை கேட்பு விபரம் கீழ்க்கண்டவாறு.

<u>பூ வியாபார அறை</u> - எஸ். செல்வகுமார்- ரூ. 30,300 (மாத வாடகை) - மின்இணைப்பு வழங்கப்பட்ட 7/11 முதல் 5/12 வரை உள்ள நிலுவை வாடகை ரூ. 3,33,300/-

<u>அ. பிளாக் (1) மற்றும் பிளாக் (2) கடைகள்</u>

| வ.எண் | கடை எண் | ஏலத்தாரர் பெயர் | உயர்ந்தபட்ச ஏல ஒப்பந்தப்புள்ளி / தொகை | மின் இணைப்பு வழங்கப்பட்ட 7/11 முதல் 5/12 வரை வாடகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | ஏ.ஆர். முகமது யூனிஸ் | 7500.00 | 82500.00 |
| 2 | 3 | எஸ். காஜா மொய்தீன் | 7500.00 | 82500.00 |
| 3 | 8 | வள்ளியம்மமாள் | 7500.00 | 82500.00 |
| 4 | 10 | எம். உஸ்மான் | 6000.00 | 66000.00 |
| 5 | 15 | கே.கே. அய்யப்பன் | 7500.00 | 82500.00 |
| 6 | 16 | கே. கார்த்திகேயன் | 7500.00 | 82500.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 17 | எ.என். சக்திவேல் | 7500.00 | 82500.00 |
| 8 | 24 | எஸ். ஷாஜகான் | 4000.00 | 44000.00 |
| 9 | 25 | கே. கார்த்திகேயன் | 3750.00 | 41250.00 |
| 10 | 26 | எஸ். விஜயகுமார் | 3500.00 | 38500.00 |
| 11 | 27 | எம்.எஸ்.அமானுல்லா | 6300.00 | 69300.00 |
| 12 | 28 | எம்.செல்வம் | 21000.00 | 23100.00 |
| 13 | 30 | ஏ. கலாவுதீன் | 10800.00 | 118800.00 |
| 14 | 33 | ஏ. அன்சாரி | 4000.00 | 44000.00 |
| 15 | 35 | எம். மாணிக்கம் | 3500.00 | 38500.00 |
| 16 | 36 | எம் . முகமது சலீம் | 3750.00 | 41250.00 |
| 17 | 45 | எஸ். முபாரக் | 5400.00 | 59400.00 |
| 18 | 34 | எ.எம். முஸ்தபா | 3750.00 | 41250.00 |

எனவே மேற்குறிப்பிட்டுள்ள கடைகளுக்கான நிலுவை வாடகை உரிமம் ஒதுக்கீடு வழங்கப்பட்ட நாளிலிருந்து 6.7.2011–ம் தேதி முடிய உள்ள காலங்களுக்கான நிலுவை வாடகையை தள்ளுபடி செய்யவும், மின் இணைப்பு வழங்கப்பட்ட 07.07.2011-ம் தேதி முதல் வாடகை தொகை வசூல் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.33 நாள்.25.05.2012-ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மின் இணைப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து வாடகை கணக்கீடு செய்து வசூலிக்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டதை மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ. ஆ. ஒப்புதல் வழங்கலாம்.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 9451/09/ அ1 (மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 48 நாள் 30.05.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 33 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2012-15-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012, 21.03.2012,29.02.2012,11.04.2012 மற்றும் 25.04.2012ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி பெற்று மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் -தொடர்பாக.

பார்வை: 1. ஏற்கனவே நடைபெற்ற மின் ஏல நாட்கள் 14.03.2012,21.03.2012,29.3.2012,11.04.2012 மற்றும் 25.04.2012

2.ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.01.05.2012

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2012-2015 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது/ மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012, 14.03.2012,21.03.2012,29.3.2012,11.04.2012 மற்றும் 25.04.2012 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட இனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு (Basevalue) விட குறைந்த தொகைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட விபரங்கள்

அ. மறுஏல தேதி – 25.04.2012

| வ எண். | குத்தகை இனங்கள் | கடந்த வருட ஏலத் தொகையில் 5% நிர்ணயம் செய்யப்பட்ட தொகை | மூன்றாண்டு சராசரி மதிப்பு | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வித் தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பன்னீர் செல்வம் பூமார்கெட் (28 நிரந்தர கடைகள் மற்றும் 144 மேடை கடைகள் நீங்கலாக) கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 36,38,618 | 29,28,200 | S.செல்வகுமார்<br>P.முருகேசன்<br>A.M.நாசர் அலி<br>M.A.கலீல்ரஹ்மான் | -<br>-<br>-<br>-<br>- | 27,30,300<br>25,30,000<br>25,20,000<br>25,00,000 | 27,30,300 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2. | மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 55,56,608 | 45,31,670 | J.சுதாகர்<br>M.அப்பாஸ்<br>M.A.கலீல்ரஹ்மான்<br>M.A.சபேர்அலி<br>C.R.விநாயகம்<br>M.அருண்சங்கர் | -<br>-<br>-<br>-<br>-<br>- | 39,00,000<br>38,59,000<br>38,00,000<br>33,33,003<br>30,15,500<br>30,00,000 | 39,00,00<br>0 |
| 3. | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் நவீனகட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 9,95,945 | 9,26,570 | S.ஹபீப்ரஸ்மான்<br>S.வேணுகோபால்<br>C.K.விஸ்வநாதன்<br>M.A.கலீல்ரஹ்மான்<br>M.அருண்சங்கர்<br>A.M.நாசர் அலி | -<br>-<br>-<br>-<br>- | 8,00,000<br>7,11,000<br>7,10,000<br>7,00,000<br>7,00,000<br>6,00,000 | 8,00,00 |
| 4. | தடாகம் ரோடு நவீனகட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 7,53,900 | 6,00,690 | C.R.விநாயகம்<br>M.A.கலீல்ரஹ்மான்<br>K.முனியாண்டி<br>A.சையது பஷீர் | -<br>-<br>- | 5,03,000<br>5,00,000<br>4,65,000<br>4,01,401 | 5,03,000 |
| 5. | டி.பி.ரோடு பள்ளி வளாகத்தில் உள்ள மைதானத்தில் வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 22,36,500 | 20,67,341 | சங்கர் ரமேஷ்<br>அருண்சங்கர்<br>M.அப்பாஸ்<br>D.ராமகிருஷ்ணன்<br>P.முருகேசன்<br>A.M.நாசர் அலி<br>M.A.கலீல்ரஹ்மான | -`<br>-<br>-<br>-<br>-<br>-<br>- | 16,00,000<br>16,00,000<br>15,15,000<br>15,00,000<br>14,65,000<br>14,50,000<br>13,00,000 | 16,00,00<br>0 |
| 6. | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 21,21,210 | - | K.A.அபுதாஹிர்<br>M.அப்பாஸ்<br>M.A.கலீல்ரஹ்மான்<br>K.நடராஜன் | -<br>- | 5,00,000<br>4,00,000<br>3,55,000<br>2,65,000 | 5,00,000 |
| 7. | மேட்டுப்பாளையம் ரோடு நவீன பேருந்து நிலையத்தில் இரண்டாம் தளத்தில் 6580 சதுரடி அளவுள்ள G.I.சீட் கட்டமைப்பு (வணிகம் மற்றும் அலுவலக உபயோகத்திற்கு) (மாதாந்திர அடிப்படையில்) | 84,500 | 84,500 | M.A.கலீல்ரஹ்மான்<br>A.M.நாசர் அலி<br>K.நடராஜன் | -<br>-<br>- | 6,580<br>5,005<br>3,000 | 6,580 |
| 8. | காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (வருடாந்திர அடிப்படையில்) ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு | 8,16,219 | 6,41,028 | M.அருண்சங்கர்<br>C.K.விஸ்வநாதன<br>M.A.கலீல்ரஹ்மான்<br>R.சுப்பிரமணி | -<br>-<br>-<br>- | 5,05,050<br>5,00,100<br>5,00,000<br>5,00,000 | 5,05,050 |

அ) வரிசை எண்.8ல் உள்ள காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் இனத்திற்கு 29.11.2011, 25.01.2012 ஆகிய தேதிகளில் ஏற்கனவே ஏலம் நடத்தப்பட்டதில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை 14.03.2012, 21.03.2012,29.03.2012 மற்றும் 11.04.2012ல் (Base Value) நிர்ணயித்த மதிப்பினை விட குறைந்த தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.மேலும், 11.04.2012ந் தேதியில் பெறப்பட்ட ஏலத்தொகை ரூ.4,05,000/-க்கு கோரப்பட்டது.25.04.2012ம் தேதிய மறு ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5,05,000/-க்கு கோரப்பட்டுள்ளது. இத்தொகையானது ஏற்கனவே 11.04.2012ல் கோரப்பட்ட ஏலத் தொகையினை விட கூடுதலாக தொகையாகும். மேற்படி,ஏல இனம் சீசன் காலமான கோடை காலத்தில் தான் அதிகப்படியான கட்டணம் வசூலாகும் மற்ற காலங்களில் குறைவான அளவு தான் கட்டணம் வசூலாகும்.மேல்ும, கோடை காலம் முடிவுற்றதும் இந்த இனத்தை ஏலத்தில் கொண்டு வரும் போது அச்சமயம் ஒருவரும் ஏலத்தில் கலந்து கொள்வதில்லை.மேலும்,மாநகராட்சியால் துறைமூலமாக வசூல் மேற்கொள்ள நேரிட்டால் அதற்கென நீச்சல் தெரிந்த (Trainee staff) பயிற்சியாளர் ஒருவரையும் மற்றும் கட்டணம் வசூலிக்க ஒரு நபரும் நியமிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் மேற்படி இனத்தை ஒரு மாத்திற்கு மட்டும்

உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கினால் கடந்த ஆண்டைப்போல் 10 மாதங்கள் ஏலம் எடுக்கப்படாமலும் தற்போது ஏலம் கோரப்பட்ட ரூ.5,05,050/- இம்மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படும். மேலும் துறைவாரியாக வசூல் மேற்கொள்ளலாம் என்றால் நீச்சல் குளத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே 5-வது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ.5,05,050/-க்கு திரு.M.அருண்சங்கர் என்பவருக்கு நிர்வாக நலன் கருதி ஒப்படைப்பு செய்ய நிதிக்குழு பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

ஆ) வரிசை எண்.1 முதல் 7 முடிய உள்ள இனங்கள் அனைத்தும் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிட (Base Value) குறைந்தபட்ச தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.எனவே,வரிசை எண்.2,3 மற்றும் 8-ல் குறிப்பிட்டுள்ள இனங்களை உள்ள பழைய குத்ததைதார்களுக்கு 01.05.2012 முதல் கடந்த வருட ஏலத்தொகையில் 5% சதவீதம் உயர்வுடன் ஒரு மாதத் தொகையை வசூலித்துக் கொண்டு மீண்டும் ஒரு மாதத்திற்கு நீடிப்பு வழங்கப்பட்டதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு அனுமதி வேண்டப்படுகிறது.

இ) வரிசை எண்.1-7 முடிய உள்ள இனங்களை மீண்டும் பொது மறு மின்ஏலம் ஒப்பந்தப்புள்ளிக்கு கொண்டுவரவும் அனுமதி வேண்டப்படுகிறது.
வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.32 நாள்.25.05.2012-ன்படி (அ) உள்ள இனத்திற்கு மறு ஏலம் கோரவும், (ஆ) மற்றும் (இ) உள்ள இனத்தை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.497/2012/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 49 நாள் 30.05.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 32 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் - ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் வசூலிக்கும் உரிமம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2012-13-ம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்வது– மின் இணைப்பு வழங்கப்பட்ட 07.07.2011 முதல் தொகை செலுத்த வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வழங்கியது – மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் -தொடர்பாக.

பார்வை :
1. மாமன்ற தீர்மான எண்.252 / நாள் 27.2.2012
2.இவ்வலுவலக அறிவிப்பு நாள்.1.3.2012 மற்றும் 4.5.12
3. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.7.5.2012
4. இவ்வலுவலக இறுதி அறிவிப்பு நாள்.7.5.2012
5. திரு.எஸ்.செல்வகுமார் என்பவரின் கடிதம் நாள் 10.05.2012 இவ்வலுவலகத்தில் கிடைக்கப் பெற்ற நாள். 11.05.2012
6. திரு.எஸ்.செல்வகுமார் என்பவர் , வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் பெறப்பட்ட மனு நாள் 10.05.2012
7. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.17.5.2012

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனமான ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2012-13-ம் ஆண்டிற்கு உரிமத்தை புதுப்பித்து நடத்திக்கொள்ள சம்மதம் தெரிவித்து ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப்பத்திரம் எழுதி திரு.எஸ்.செல்வகுமார் குத்தகைதாரர் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

பார்வை 1ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி திரு.எஸ்.செல்வகுமார் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதில் நாளது வரை தொகை செலுத்தாமல் உள்ளதாலும் பார்வை 2ல் காணும் இவ்வலுவலக அறிவிப்பு மூலம் 24 மணி நேரத்திற்குள் தொகை செலுத்த அறிவிப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து தொகை செலுத்ததால் பார்வை 3ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படி பார்வை 4ல் காணும் இவ்வலுவலக இறுதி அறிவிப்பின் படி 3 தினங்களுக்குள் குத்தகை தொகை ரூ. 11,65,500.00 மற்றும் வருமான வரி ரூ.26,340.00 ஆகியவற்றை செலுத்தவும் தவறும் பட்சத்தில் தங்களது உரிமத்தை ரத்து செய்து பொது மறு ஏலத்திற்கு கொண்டு வரப்படும் என இறுதியாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வாளகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் ஆகியவற்றை ஏலம் எடுக்கப்பட்டதில் ,

ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடியிலுள்ள கடைகள் எதுவும் ஏலத்தில் விடப்படவில்லை எனவும், இந்த வருடம்தான் ஏலம் நடைபெற்று கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் ஆகியவற்றை நடத்தாத காலத்திற்கு உண்டான தொகையை குறைத்து வழங்குமாறு குத்தகைதாரர் வணக்கத்திற்குறிய மேயர் அவர்களிடம் விண்ணப்பம் வழங்கியுள்ளார்.

ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடியில் முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 18 கடைகளுக்கு 7.7.2011-ல் மின் இணைப்பு வழங்கப்பட்டது. இவ்வலுவலக கோப்பு எண். 9451 / 2009 / ஏ1(மே) -ல் மேற்படி கடைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதி முதல் வாடகை வசூல் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் இரு சக்கர வாகன நிறுத்துமிடத்திற்கும் 7.7.2011-ம் தேதி முதல் மின்இணைப்பு வழங்கப்பட்டது. மேற்படி இனத்திற்கு மின்இணைப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து சுங்கம் வசூல் செய்யலாம் எனவும், 1.12011 முதல் 31.12.2011 வரையில் செலுத்தப்பட்டுள்ள ஒருவருட குத்தகைத்தொகை ரூ.11,10,000/-த்தில் 1.1.2011முதல் 30.6.2011 வரை உள்ள தொகையை தள்ளுபடி செய்யவும்(6 மாதம்), குத்தகைத்தொகையை ஏற்றுக்கொள்ளவும், மீதியுள்ள தொகையை 2012-2013-ம் வருடத்திற்கு 5 சதவீதம் உயர்வு செய்த குத்தகைதொகைக்கு சரிசெய்தும் மீதமுள்ளதொகையை வசூல் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 42 நாள் 25.05.2012ன் படி அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 497/2012/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 50 நாள் 30.05.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 42 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

பொருள் : வணிகவளாக கடைகள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - உரிமம் காலம் - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்து உத்திரவிடப்பட்டது - எம்.ஜி.ஆர். தினசரி மொத்த காய்கறி மார்க்கெட்டிற்கு மாதந்திர உரிமக் கட்டணம் குறைவு செய்வது – வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வழங்கியது – மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை எண்.147 நாள் 30.12.2000.
2. அரசாணை எண்.92 நாள்.3.07.2007.
3. மா.ந.ம.தீர்மான எண்.157 நாள்.31.10.2011.
4. ஆணையாளர் அவர்களின் குறிப்பு நாள்.23.5.2012

----------------

பார்வையில் காணும் அரசாணைப்படி கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மணடலத்திற்குட்பட்ட வணிக வளாக கடைகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து வாடகை வசூல் செய்யப்பட்டது. இவ்வாடகைமதிப்பு மற்ற தனியார் நிறுவனங்களை ஒப்பிட்டுபார்க்கையில் மிகவும் குறைவாக உள்ளது. இக்கடைகள் அனைத்தும் மூன்று முறை (9 ஆண்டுகளுக்குமேல்) வாடகை உயர்வு செய்யப்பட்டாலும் மாதாந்திர வாடகை மிககுறைவாக உள்ளதால் இக்கடைகளுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகையை மாமன்ற தீர்மானத்தின்படி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

உயர்வு செய்யப்பட்டுள்ள வாடகைத்தொகையை மேட்டுப்பாளையம்ரோடு எம்.ஜி.ஆர். மொத்த காய்கறி மார்க்கெட் கடைகள் தவிர அனைத்து வணிகவளாகக் கடைகளும் இவ்வாடகை உயர்வை ஏற்றுக்கொண்டு தொகை செலுத்தியுள்ளனர். ஆனால் மேட்டுப்பாளையம்ரோடு எம்.ஜி.ஆர். மொத்த காய்கறி மார்க்கெட் வியாபாரிகள் தங்களுடைய கடைகளுக்கு போதிய வசதிகள் இல்லாததாலும், மேற்கூரைகள் தகரக்கொட்டகையாக உள்ளது என்பதனாலும், மார்க்கெட்டை வேறு புதிய இடத்திற்கு மாற்ற உத்தேசித்துள்ளதாலும் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகைத்தொகையை குறைத்து தரும்படி விண்ணப்பித்துள்ளனர்.

மேற்படியாரின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்ததில் சம்மந்தப்பட்ட இடத்தில் உள்ள கடைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட புதிய வாடகைத்தொகையில் சுமார் 15 சதவீதம் வரை குறைவு செய்து வாடகை நிர்ணயம் செய்ய ஆணையாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் ஆணையாளர் அவர்கள் மேற்படி எம்.ஜி.ஆர்.மார்க்கெட்டினை புதிய இடத்திற்கு மாற்றம் செய்ய மாமன்ற தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதாகவும், மேலும் இவ்வாடகை தொகை மூன்றாண்டு காலத்திற்கு அமலில்

இருக்கும் என்பதால் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகையினில் குறைவு செய் வது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 43. நாள் 25.05.2012ன் படி புதிதாக தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகையிலிருந்து 25 சதவீதம் குறைவு செய்து நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கபடுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.1476/2012/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 51 நாள் 30.05.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 43 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2012-15-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012, 21.03.2012,29.3.2012,11.4.2012, 25.4.2012 மற்றும் 10.5.2012-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி பெறப்பட்டது - மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் -தொடர்பாக.

பார்வை: 1. ஏற்கனவே நடைபெற்ற மின்ஏல நாட்கள் 14.03.2012, 21.03.2012, 29.3.2012, 11.4.2012 மற்றும் 25.4.2012
2. ஆறாவது மறுஏலம் நாள்.10.5.2012
3. ஆணையாளர் அவர்களின் 15.05.2012ம் தேதிய உத்தரவு

****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2012-2015 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கனவே நான்கு முறை 14.03.2012, 21.03.2012, 29.3.2012, 11.4.2012 & 10.5.2012 ஆகிய தேதிகளில் ஏலம் நடைபெற்றது. கீழ்கண்ட 7 இனங்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏல மதிப்பினை விட குறைந்தபட்ச ஏலத்தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. எனவே இவ்வினங்களை 10.5.2012-ம் தேதியன்று மீண்டும் 6-வது முறையாக பொது மறு மின் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறாகும்.

6-வது முறையாக மறு ஏலம் நடைபெற்ற தேதி – 10.5.2012

| வ. எண் | குத்தகை இனங்கள் | கடந்த வருட ஏலத்தொகைய ில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை | மூன்றாண்டு சராசரி மதிப்பு | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பன்னீர் செல்வம் பூமார்கெட் (28 நிரந்தர கடைகள் மற்றும் 144 மேடை கடைகள் நீங்கலாக) கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 36,38,618 | 29,28,200 | A.அன்சாரி<br>G.ரங்கராஜ் | -<br>- | 27,45,000<br>26,66,666 | 27,45,000 |
| 2. | மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 55,56,608 | 45,31,670 | J.சுதாகர்<br>P.A.பதுருதீன்<br>O.S.சையது இப்ராஹீம்<br>S.ஹபீப்ரஸ்மான்<br>S.S.ஜமால்<br>M.A.சபேர்அலி<br>A.அன்வர்<br>M.அப்பாஸ்<br>K.A.அபுதாஹிர்<br>S.காளியப்பன்<br>A.வெங்கடேஸ்<br>V.N.நாச்சிமுத்து | -<br>-<br>-<br>-<br>-<br>-<br>-<br>-<br>-<br>-<br>-<br>-<br>- | 42,20,000<br>40,00,000<br>39,39,399<br>38,38,388<br>37,00,000<br>36,00,000<br>36,36,000<br>36,00,000<br>35,10,000<br>34,20,000<br>32,00,100<br>28,00,100 | 42,20,000 |
| 3. | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் | 9,95,945 | 9,26,570 | S.ஹபீப்ரஹ்மான்<br>M.A.சபேர்அலி | -<br>- | 8,01,000<br>7,50,000 | 8,01,000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | நவீனகட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | | | K.நடராஜன்<br>K.A.அபுதாஹிா<br>M.அப்பாஸ்<br>A. வெங்கடேஷ் | -<br>-<br>-<br>- | 7,65,000<br>7,20,000<br>7,00,000<br>6,00,000 | |
| 4. | தடாகம் ரோடு நவீனகட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 7,53,900 | 6,00,690 | C.R.விநாயகம்<br>M.அப்பாஸ்<br>A. வெங்கடேஷ்<br>V.M.நாச்சிமுத்து<br>S.S.ஜமால்<br>S.முஹம்மது ரபிக் | -<br>-<br>-<br>-<br>- | 5, 03,000<br>5, 00,000<br>4,50,000<br>4,44,444<br>4,30,000<br>4,20,000 | 5, 03,000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5. | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 21,21,210 | 21,21,210 | K.A.அபுதாஹிர்<br>M. அப்பாஸ்<br>K.நடராஜன்<br>V.K.ரஹ்மத்துல்லா | -<br>-<br>-<br>- | 5,10,000<br>4,50,000<br>3,65,000<br>1,44,000 | 5,10,000 |
| 6. | டி.பி.ரோடு பள்ளி வளாகத்தில் உள்ள மைதானத்தில் வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 22,36,500 | 20,67,341 | M.அப்பாஸ்<br>S.S.ஜமால்<br>P.A.பதுருதீன்<br>G.ரங்கராஜ்<br>V.M.நாச்சிமுத்து<br>K.A.அபுதாஹிர் | -`<br>-<br>-<br>-<br>-<br>- | 16,25,000<br>15,10,000<br>14,50,000<br>13,66,666<br>13,50,000<br>12,10,000 | 16,25,000 |
| 7. | மேட்டுப்பாளையம் ரோடு நவீன பேருந்து நிலையத்தில் இரண்டாம் தளத்தில் 6580 சதுரடி அளவுள்ள G.I. சீட் கட்டமைப்பு (வணிகம் மற்றும் அலுவலக உபயோகத்திற்கு) (மாதாந்திர அடிப்படையில்) | 84,500 | 84,500 | ஒருவரும் ஏலத்தில் கலந்து கொள்ள வில்லை | - | - | - |

வரிசை எண்.1-ல் உள்ள பன்னீர் செல்வம் பூமார்கெட் (28 நிரந்தர கடைகள் மற்றும் 144 மேடை கடைகள் நீங்கலாக) கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012, 11.4.2012 மற்றும் 25.4.2012 ஆகிய தேதிகளில் பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. 10.5.2012-ம் தேதிய பொது மின் ஏலத்தில் அதிக பட்ச தொகையாக ரூ.27,30,300-க்கு ஏலம் கோரப்பட்டது. இத்தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட குறைவாக உள்ளது.

எனவே 01.04.2012-ம் தேதி முதல் துறைமூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் மேற்படி மார்க்கெட்டில் ஒரு நாள் ஒன்றிற்கு சராசரியாக ரூ.3140/- வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. (ரூ.3140 x 365 நாட்கள் = 11,46,100/-) 10.05.2012-ந் தேதிய 6-வது ஏலத்தில் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.27,45,000/- பெறப்பட்டுள்ளது. இத்தொகையானது மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட(Base value) (ரூ.36,38,618/-) தொகையை விட குறைவாக உள்ளது. ஆனால் துறைமூலம் வசூலிக்கப்பட்டு வரும் தொகையை விட அதிகமாக உள்ளது.

வரிசை எண்.2.உள்ள மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012, 11.4.2012 மற்றும் 25.4.2012 ஆகிய தேதிகளில் பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. 25.4.2012-ந்தேதிய ஏலத்தில் ரூ.39,00,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. 10.5.2012-ம் தேதிய 6-வது மறு ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக ரூ.42,20,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

வரிசை எண்.3.பன்னீர் செல்வம் பூமார்க்கெட் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012, 11.4.2012 மற்றும் 25.4.2012 ஆகிய தேதிகளில் பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இது மாநகராட்சி நிர்ணய தொகையைவிட குறைவு. 25.4.2012-ந் தேதிய மறு ஏலத்தில் ஏலத்தொகை ரூ.8,00,000/-கோரப்பட்டது. 10.5.2012-ம் தேதியில் நடைபெற்ற 6-வது மறு ஏலத்தில் கூடுதலான தொகையாக 8,01,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

வரிசை எண்.4-ல் உள்ள தடாகம் ரோடு நவீனகட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012, 11.4.2012 மற்றும் 25.04.2012 ஆகிய தேதிகளில் பொது மறு மின் ஏலம் நடத்தப்பட்டதில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதிகபட்ச தொகை ரூ.4,61,000/-க்கு கோரப்பட்டது. இது மாநகராட்சி நிர்ணய தொகையை விட குறைவு. எனவே 1.4.2012 முதல் துறை மூலமாக வசூல் மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி கட்டணகழிப்பிடத்தில் நாள் ஒன்றிற்கு சராசரியாக ரூ.820/- வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. (ரூ.820x365 நாட்கள்= ரூ.2,99,300/-) 10.05.2012-ந் தேதிய

6-வது ஏலத்தில் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.5,00,000/- பெறப்பட்டுள்ளது. 5-வது ஏலத்தில் திரு.ஊ.ச.விநாயகம் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.5,03,000/-க்கு பெறப்பட்டுள்ளது. இத்தொகை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட(Base value) (ரூ.7,53,900/-) தொகையை விட குறைவாக உள்ளது. ஆனால் துறைவாரியாக வசூலிக்கப்பட்டு வரும் தொகையை விட அதிகமாக உள்ளது.

வரிசை எண்.5-ல் உள்ள மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012 மற்றும் 11.4.2012 ஆகிய தேதிகளில் பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதிகபட்ச தொகை ரூ.3,33,333 –க்கு கோரப்பட்டது. இது மாநகராட்சி நிர்ணய தொகையை விட குறைவு. எனவே 1.4.2012 முதல் துறை வாரியான வசூல் மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி வாகனம் நிறுத்தும் இடத்திற்கு ஒரு நாளுக்கு சராசரியாக ரூ.2240/- வசூலிக்கப்பட்டு வருகிறது. (ரூ.2240x365 நாட்கள்=ரூ.8,17,600/-) 25.04.2012-ந் தேதிய 5-வது ஏலத்தில் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.5,00,000/- பெறப்பட்டுள்ளது.

10.05.2012ல் நடைபெற்ற 6 வது மறு ஏலத்தில் ரூ.5,10,000/-க்கு ஏலம் கோரப்பட்டுள்ளது. இத்தொகையானது மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட(Base value) (ரூ.21,21,210/-) தொகையை விட குறைவாக உள்ளது. மேலும் துறைமூலமாக வசூலிக்கப்பட்டு வரும் தொகையை விடவும் குறைவாக உள்ளது.

வரிசை எண்.6-ல் உள்ள டி.பி.ரோடு பள்ளி வளாகத்தில் உள்ள மைதானத்தில் வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012,11.4.2012 மற்றும 25.4.2012 ஆகிய தேதிகளில் பொது , மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. 25.4.2012ம் தேதிய மறுஏலத்தில் ஏலத்தொகை ரூ.16,00,000 க்கு கோரப்பட்டது. 10.5.2012-ந்தேதிய 6-வது ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளியில் ரூ.16,25,000 க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர்.

வரிசை எண்.7-ல் உள்ள மேட்டுபாபளையம் ரோடு நவீன பேருந்து நிலையத்தில் இரண்டாம் தளத்தில் 6580 சதுரடி அளவுள்ள G.I. சீட் கட்டமைப்பு (வணிகம் மற்றும் அலுவலக உபயோகத்திற்கு) (மாதாந்திர அடிப்படையில்) உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012, 11.4.2012 மற்றும் 25.4.2012 ஆகிய தேதிகளில் பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. 11.4.2012-ந்தேதிய ஏலத்தில் ரூ.3,300/-க்கு ஏல தொகையாக கோரப்பட்டது. 25.4.2012-ம் தேதிய ஏலத்தில் ரூ.6,580/-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இத்தொகையானது 11.4.2012-ம் தேதிய ஏலத்தொகையினை விட கூடுதலாகும். மேலும் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட Base value (ரூ.84,500/-)ஐ விட குறைவு. 10.5.2012ம் தேதிய பொதுமறுமின் ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. மேலும் G.I.சீட் கட்டமைப்பு முழுமையாக பூர்த்தியடையாமல் தேவையான அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமலும் திறந்தவெளியாக இருப்பதால் 8-முறை ஏலம் நடத்தப்பட்டும் ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்வதில்லை. மேலும் மேற்படி கட்டமைப்புக்கு தேவையான மராமத்துப்பணிகள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க சம்மந்தப்பட்ட உதவி நிர்வாக பொறியாளரிடம் கோரலாம். எனவே மராமத்துப்பணிகள் செய்யப்படும் வரை இவ்வினத்தை பொது ஏலத்திற்கு கொண்டு வருவதை நிறுத்தி வைக்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 34. நாள் 25.05.12ன் படி வரிசை எண் 1 மற்றும் 2ல் உள்ள இனங்களுக்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்யவும் வரிசை எண் 3 முதல் 6 வரை உள்ள இனங்களை மறு ஏலம் கோரவும் வரிசை எண்.7-ஐ மராமத்து செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கபடுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 497/2012/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 52 நாள் 30.05.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 34 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை உரிம இனங்களுக்கு 10.05.2012-ல் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைத்தல் - தொடர்பாக.

--------

குத்தகை இனங்களுக்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ்க்காணுமாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மின் ஏலத்தில் எவரும் ஏலம் கோரமுன் வரவில்லை.

அ. புலிய குளம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம்.

| வ. எண் | பெயர் | கடைசி மூன்றாண்டு சராசரி | 2011-2012ம் ஆண்டு ஏலத் தொகை | நிர்ணயம் செய்யப் பட்ட அரசு வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக்கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்த பட்ச ஏலத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மின் ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 1. | திரு.G. ரங்கராஜ் | 1,93,887 | 2,07,000 | 2,18,000 | … | 1,40,009 | 1,40,009 |
| 2. | திரு. S. ரமேஷ் | | | | … | 1,05,000 | … |
| 3. | திரு. ஹரிகிருஷ்ணன் | | | | … | 1,40,000 | … |
| 4. | திரு. S. S. ஜமால் | | | | … | 1,10,000 | … |

மேற்கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயம் செய்த உரிமத் தொகையைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போதைய ஏலத்தில் திரு.G. ரங்கராஜ் என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 1,40,009/- கோரியுள்ளார்.

ஆ. சிங்காநல்லூரில் பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம்

| வ.எண் | பெயர் | கடைசி மூன்றாண்டு சராசரி | 2010-2011 ம் ஆண்டு ஏலத் தொகை | நிர்ணயம் செய்யப்பட்ட அரசு வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக்கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்த பட்ச ஏலத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மின் ஏலத் தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | |
| 1. | திரு.C.R. விநாயகம் | 6,30,888 | 8,14,566 | 8,55,300 | … | … | |
| 2. | திரு.N. ரகோத்தமன் | | | | … | … | |
| 3. | திரு.S. வேலுச்சாமி | | | | … | … | |
| 4. | திரு. K. ராஜீ | | | | … | 5,55,000 | |
| 5. | திரு. K. முனியாண்டி | | | | … | 4,80,000 | |
| 6. | திரு.G.ரங்கராஜ் | | | | … | 6,00,000 | |
| 7. | திரு.S.ஹபீப்ரஹ்மான் | | | | … | 6,40,000 | |
| 8. | திரு.P.முகமது பஷீர் | | | | … | … | |
| 9. | திரு.T.S. அம்பிராஜ் | | | | … | … | |
| 10. | திரு. ரகுராம் | | | | … | … | |
| 11. | திரு. தீனதயாளன் | | | | … | … | |
| 12. | திரு.L.N.செய்யதுஇப்ராஹீம் | | | | … | 6,50,000 | |
| 13. | திரு.O.A.செய்யது இப்ராஹீம் | 6,30,888 | 8,14,566 | 8,55,300 | … | 7,00,000 | 7,00,000 |
| 14. | திரு.S.ரமேஷ் | | | | … | … | |
| 15. | திரு.M.ஹரி கிருஷ்ணன் | | | | … | … | |
| 16. | திரு.M.அன்புராஜ் | | | | … | 5,50,000 | |
| 17. | திரு.S.காளியப்பன் | | | | … | 5,60,000 | |
| 18. | திரு.V. K.ரஹ்மத்துல்லா | | | | … | 6,10,000 | |
| 19. | திரு.S.S.ஜமால் | | | | … | 6,00,000 | |
| 20. | திரு.A.வெங்கடேஷ் | | | | … | 4,50,000 | |
| 21. | திரு.S. முகமது ரபீக் | | | | … | 6,30,000 | |
| 22. | திரு.V.M.நாச்சிமுத்து | | | | … | 5,00,000 | |
| 23. | திரு.K.A.அபுதாகீர் | | | | … | 6,10,000 | |
| 24. | திரு.K.நடராஜன் | | | | … | 5,50,000 | |

மேற்கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயம் செய்த உரிமத் தொகையைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது . தற்போதைய ஏலத்தில் திரு.O.A. செய்யது இப்ராஹீம் என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 7,00,000/- க்கு கோரியுள்ளார்.

மேற்காணும் புலியகுளம் கட்டண கழிப்பிடத்திற்கு திரு . ஜி . ரங்கராஜ் என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,40,009 /- க்கு கோரியுள்ளார். புலியகுளம் கட்டணகழிப்பிடம் ஆறு முறை பொது ஏலம் நடத்தப்பட்டும் திரு. ரங்கராஜ் ரூ.1,40,009 /- க்கு கோரியுள்ளார். துறை மூலம் வசூல் மேற்கொள்ளும் பட்சத்தில் ஏலம் கோரிய தொகையைவிட குறைவாகவே வருவாய் ஏற்படும். வரி விதிப்பு மற்றும் நிதிக் குழுவின் தீர்மான எண் 31 நாள் 25.05.2012ன்படி உயர்ந்தபட்சமாக கோரியுள்ள ஒப்பந்ததாரருக்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்படுகிறது. எனவே வரிவிதிப்பு நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

மேலும் சிங்காநல்லூரில் பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் ஆறு முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் திரு.O.A.செய்யது இப்ராஹீம் என்பவா் ரூ.7,00,000/- க்கு கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு சராசரியை விட அதிகமாக இருப்பதால் மேற்காணும் இனத்தினை திரு.O.A.செய்யது இப்ராஹீம் என்பவர் ஒப்படைப்பு செய்வது தொடர்பாக வரி விதிப்பு மற்றும் நிதிக் குழுவின் தீர்மான எண் 31 நாள் 25.05.2012ன்படி உயர்ந்தபட்சமாக கோரியுள்ள ஒப்பந்ததாரருக்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்படுகிறது. எனவே வரிவிதிப்பு நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அ மற்றும் ஆ மன்றத்தின் முடிவிற்கு ந.க.எண். 864/2012/ கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 53 நாள் 30.05.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 31 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை உரிம இனங்களுக்கு 10.05.2012 மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சம்மந்தமாக வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைத்தல் - தொடர்பாக.

-------------

குத்தகை இனங்களுக்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ்க்காணுமாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மின் ஏலத்தில் எவரும் ஏலம் கோரமுன் வரவில்லை .

அ. சிங்காநல்லூர் பேருந்து நிலைய பேருந்து நுழைவு கட்டணம்.

| வ.எண் | பெயர் | கடைசி மூன்றாண்டு சராசரி | 2011. 2012 ம் ஆண்டு ஏலத் தொகை | நிர்ணயம் செய்யப்பட்ட அரசு வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக்கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்த பட்ச ஏலத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மின் ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 1. | திரு.M.A.கலீல் ரஹ்மான் | 13,89,332 | 12,90,900 | 13,89,332 | … | … | … |
| 2. | திரு. N.செந்தில்குமார் | | | | … | 10,90,000 | … |
| 3. | திரு.M.ராமசாமி | | | | … | … | … |
| 4. | திரு. M.A. சபேர் அலி | | | | … | 14,31,000 | 14,31,000 |

மேற்கண்ட இனம் அரசு நிர்ணயிக்கப்பட்ட உரிமத் தொகையைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போதைய ஏலத்தில் திரு. M.A. சபேர் அலி என்பவா் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 14,31,000/- கோரியுள்ளார். இது அரசு நிர்ணயம் செய்ப்பட்ட வருடாந்திர உரிமத் தொகையைவிட ரூ. 41,668/- அதிகமாக கோரியுள்ளார். எனவே திரு. M.A. சபேர் அலி என்பவருக்கு ஒப்படைக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 30 நாள் 25.05.2012ன்படி அனுமதி வழங்ககப்பட்டுள்ளது. எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அ. அனுமதிக்கலாம் ந.க.எண். 864/2012/ கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 54 நாள் 30.05.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 30 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 20**

பொருள் : வணிகவளாக கடைகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - உரிம காலம் - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகையை உயர்வு செய்ய கோரி வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைத்தல் – தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை எண்.147 நாள் 30.02.2000
2. அரசாணை எண். 92 நாள் 03.07. 2007

---------

பார்வையில் காணும் அரசாணைப்படி கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழக்கண்ட வணிக வளாக கடைகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து வாடகை வசூல் செய்யப்பட்டது. இவ்வாடகை மதிப்பு மற்ற தனியார் நிறுவனங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகவும் குறைவாக உள்ளது. இக்கடைகள் அனைத்தும் மூன்று முறை (9 ஆண்டுகளுக்கு மேல் ) வாடகை உயர்வு செய்யப்பட்டாலும் மாதாந்திர வாடகை மிககுறைவாக உள்ளதால் அக்கடைகளுக்கு பொதுப்பணித்தறை மதிப்பீட்டின்படி வாடகையை உயர்வு செய்ய வேண்டியுள்ளது. தற்போது உள்ள மாதாந்திர வாடகைக்கு 15சதவீதம் உயர்வு செய்யப்பட்ட விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

9 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்

ராமநாதபுரம் மாநகராட்சி வணிக வளாகம் 232 சதுரடி பரப்பளவு (வார்டு எண் 69)

| கடை எண். | உரிமதாரர் பெயர் | தற்போதைய மாதாந்திர வாடகை கட்டணம் | 15% உயர்வு செய்யப்பட்டால் பெறப்படும்வாடகை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | திருமதி. U. கீதா | ரூ.3885/- | ரூ.4468/- |
| 2. | திருமதி. U. கீதா | ரூ.3485/- | ரூ.4008/- |
| 3. | திருமதி. B. ருக்குமணி | ரூ.3726/- | ரூ.4285/- |
| 4. | திருமதி.ராபிக் மூசா | ரூ.3792/- | ரூ.4361/- |
| 5. | திரு. R. சின்னசாமி | ரூ.3860/- | ரூ.4439/- |
| 6. | திரு.DR.மோகன ராமச்சந்திரன் | ரூ.3792/- | ரூ.4361/- |
| 7. | திரு.ராஜேந்திரன் | ரூ.3992/- | ரூ.4591/- |
| 8. | திரு.ராஜேந்திரன் | ரூ.3992/- | ரூ.4591/- |
| 9. | திருமதி.M.A.கிருஷ்ணவேணி | ரூ.4654/- | ரூ.5352/- |
| 10. | திரு.கருப்பண்ணன் | ரூ.4415/- | ரூ.5077/- |
| 11. | திரு.P.M.அப்துல் காதர் | ரூ.7850/- | ரூ.9028/- |
| 12. | திரு. K. ராஜாராம் | ரூ.4256/- | ரூ.4894/- |
| 13. | திரு. P. ராஜேந்திரன் | ரூ.4002/- | ரூ.4602/- |
| 14 | திரு. A. பாக்கியசாமி | ரூ.3992/- | ரூ.4591/- |
| 15. | திரு. C. செந்தில்குமார் | ரூ.3392/- | ரூ.4591/- |
| 16. | திரு. V. K. செந்தில்குமார் | ரூ.4002/- | ரூ.4602/- |
| 17. | திரு. C. V. சேஷாத்திரி | ரூ.4002/- | ரூ.4602/- |
| 18. | திரு. R. ரவீந்திரராஜ் | ரூ.4002/- | ரூ.4602/- |
| 19. | திரு. சாமியப்பன் | ரூ.4531/- | ரூ.5211/- |
| 20. | திரு. முகமது இஸ்மாயில் | ரூ.5331/- | ரூ.6131/- |
| 21. | திரு. ஹபீப் ரகுமான் | ரூ.4002/- | ரூ.4602/- |

ராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் 125 சதுரடி பரப்பளவு (வார்டு எண் 67)

| | | | |
|---|---|---|---|
| 3. | திரு. தங்கராஜ் | ரூ.2670/- | ரூ.3071/- |
| 4. | திரு. வேலாயுதம் | ரூ.3473/ | ரூ.3994/- |
| 5. | திருமதி.கே. சரஸ்வதி | ரூ.3473/ | ரூ.3994/- |
| 6. | திருமதி. வசந்தகுமாரி | ரூ.3335/ | ரூ.3835/- |
| 7. | திரு. முகமது சர்புதீன் | ரூ.3335/ | ரூ.3835/- |
| 8. | திரு.பாதாளமுத்து நாடார் | ரூ.3404/ | ரூ.3915/- |
| 9. | திரு.பாதாளமுத்து நாடார் | ரூ.3427/ | ரூ.3941/- |
| 10. | திரு. குமரவேலு | ரூ.3496/ | ரூ.4020/- |

புலியகுளம் மாநகராட்சி வணிக வளாகம் 125 சதுரடி பரப்பளவு (வார்டு எண் 69)

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. சேதுவராஜ் | ரூ.1490/- | ரூ.1714/- |
| 2. | திரு. செபாஸ்டியன் | ரூ.2021/- | ரூ.2324/- |
| 3. | திருமதி. கே.மாலதி | ரூ.2183/- | ரூ.2510/- |
| 4. | திரு. V. திரவியராஜ் | ரூ.1510/- | ரூ.1737/- |
| 5. | திரு. P. விஜயன் | ரூ.1479/- | ரூ.1701/- |
| 6. | திரு. K. கலித் | ரூ.1479/- | ரூ.1701/- |
| 7. | திரு. R. சண்முகம் | ரூ.3218/- | ரூ.3701/- |
| 8. | திரு. U.R. மணி | ரூ.3138/- | ரூ.3609/- |

உப்பிலிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம் 232 சதுரடி பரப்பளவு (வார்டு எண் 64)

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. R. கிருஷ்ணசாமி | ரூ.1654/- | ரூ.1902 |
| 2. | திருமதி. ராஜேஸ்வரி | ரூ.1654/- | ரூ.1902 |
| 3. | திரு. S. பழனிசாமி | ரூ.1654/- | ரூ.1902 |
| 4. | திரு. R. சீதாராமன் | ரூ.1654/- | ரூ.1902 |
| 5. | திரு. அய்யாசாமி | ரூ.1654/- | ரூ.1902 |
| 6. | திரு. S.R. கிருஷ்ணசாமி | ரூ.1654/- | ரூ.1902 |
| 7. | திரு. P. காளியப்பன் | ரூ.1654/- | ரூ.1902 |

சிங்காநல்லூர் மாநகராட்சி வணிக வளாகம் 232 சதுரடி பரப்பளவு (வார்டு எண் 63)

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. P. சௌந்தர்ராஜன் | ரூ.3348/- | ரூ.3850 |
| 2. | திருமதி. P. பாப்பம்மாள் | ரூ.3348/- | ரூ.3850 |
| 3. | திரு. P. வேலுசாமி | ரூ.3348/- | ரூ.3850 |
| 4. | திரு. பழனியப்பன் | ரூ.3348/- | ரூ.3850 |
| 5. | திரு. மருதாசலம் | ரூ.3348/- | ரூ.3850 |
| 6. | திரு. நவனீதகிருஷ்ணன் | ரூ.3348/- | ரூ.3850 |
| 7. | தலைவர்காந்திபுரம் சர்வோதய சங்கம் | ரூ.3348/- | ரூ.3850 |

எனவே மேற்படி கடைகளுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி மாதாந்திர வாடகையை உயர்வு செய்வதற்கும் சேவைவரி 10.30 சதவீதம் செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமம் தாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் ஒப்படைக்கவும், வாடகைக்கு ஒப்புக் கொள்ளாத உரிமம் தாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானஎண் 28 நாள் 25.05.2012ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே வரிவிதிப்பு நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்
வணக்கத்திற்குரிய மேயர் குறிப்பு - பொதுப்பணி மதிப்பீடு பரிசீலிக்கலாம்

ந.க.எண்.3207/ 2012/ கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 55 நாள் 30.05.2012**

ராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாக கடை எண்கள் 8, 9 மற்றும் 10 ஆகியவற்றில் உரிமதாரர் அல்லாத பிற நபர்கள் கடை நடத்துவதாக தெரிவிக்கப்படுவதால், உரிய விசாரணைக்குப் பின்னர் உண்மையென கண்டறியப்பட்டால் இம்மூன்று கடைகளுக்கு மறு ஏலம் நடத்தவும், மற்ற கடைகளை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 28 நாள் 25.5.2012-ற்கு ஒப்புதல் வழங்கியும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

| | |
|---|---|
| பொருள்- | கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - இராமகிருஷ்ணாபுரம் வணிக வளாகக் கடை எண்.1 மற்றும் 2 – மாத வாடகை இனங்களுக்கு 10.05.2012-ஆம் தேதியில் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியை ஏற்க - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள்வைத்தல் - தொடர்பாக. |

--------

மாத வாடகை இனங்களுக்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ்க்காணுமாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

இராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிகவளாக கடை எண் - 1

| வ.எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மாத வாடகைத் தொகை | மாத வாடகை உச்ச கேள்வி | | உயர்ந்த பட்ச மாத வாடகைத் தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 1. | திரு.பாபு | 6,125 | … | 6,100 | … |
| 2. | திரு.M.செல்வம் | | … | … | … |
| 3. | திரு.T.மாணிக்கவள்ளி | | 15,600 | 8,600 | … |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | திரு.N.ரகோத்தமன் | | … | … | … |
| 5. | திரு.M.ஹரிகிருஷ்ணன் | | … | 5,200 | … |
| 6. | திரு.S. ஹபீப் ரஹ்மான் | | … | 18,000 | 18,000 |
| 7. | திரு.T.S. அம்பிராஜ் | | … | … | … |
| 8. | திரு.L.N.செய்யது இப்ராஹீம் | | … | 16,500 | … |
| 9. | திரு.R.கோபால கிருஷ்ணன் | | … | 12,250 | … |

இராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிகவளாக கடை எண் - 2

| வ.எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மாத வாடகைத் தொகை | மாத வாடகை உச்ச கேள்வி | | உயர்ந்த பட்ச மாத வாடகைத் தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 1. | திரு.பாபு | | … | 6,500 | … |
| 2. | திரு.M.செல்வம் | | … | … | … |
| 3. | திரு.முருகானந்தம் | | … | 8,600 | … |
| 4. | திரு.N.ரகோத்தமன் | | … | 5211 | … |
| 5. | திரு.M.ஹரிகிருஷ்ணன் | | … | … | … |
| 6. | திரு.S.ஆதி தமிழ்மணி | | … | 6500 | … |
| 7. | திரு.M. தங்கராஜ் | 6,125 | … | … | … |
| 8. | திரு.S. ஹபீப் ரஹ்மான் | | … | 18,000 | 18,000 |
| 9. | திரு.T.S. அம்பிராஜ் | | … | … | … |
| 10. | திரு.L.N.செய்யது இப்ரபஹீம் | | | 16,500 | |
| 11. | திரு.R.கோபால கிருஷ்ணன் | | 15100 | 11,750 | |

மேற்கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயம் செய்த மாத வாடகைத் தொகையைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போதைய ஏலத்தில் திரு.எஸ்.ஹபீப் ரஹ்மான் என்பவர் மேற்கண்ட இரண்டு கடைகளுக்கும் உயர்ந்த பட்ச மாத வாடகை தொகையாக கடை ஒன்றுக்கு ரூ.18,000/- க்கு கோரியுள்ளார்.

எனவே, இராமகிருஷ்ணாபுரம் வணிக வளாகக் கடை எண்.1 மற்றும் 2-க்கு உயர்ந்த பட்ச ஏலத் தொகை கோரியள்ள ஏலதாரர் திரு.எஸ்.ஹபீப் ரஹ்மான் என்பவருக்கு மேற்காணும் மாதாந்திர வாடகை உரிமையினத்தை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 29 நாள் 25.05.2012 ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தாள் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அ. அனுமதிக்கலாம் ந.க.எண்.8804/ 2012/ கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 56 நாள் 30.05.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 29 நாள் 25.05.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலத்தில் உள்ள தெரு விளக்குகளை மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி செய்ய தி./ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தாருக்கு மாமன்ற தீர்மான எண் 211 நாள் 29.08.2008-ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக்காலம் 26.09.2011-ல் முடிவடைய உள்ள நிலையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் தனது தீர்மான எண் 521 நாள் 26.07.2011-ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் விலைகள் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரகம் பரிசீலனை செய்து அனுமதி வழங்க 3-8-2011-ல் கடிதம் மூலம் கோரப்பட்டது.

இந்நிலையில் 26-09-2011-ம் தேதியுடன் ஒப்பந்தகாலம் முடிவடைய உள்ளதால் கால நீட்டிப்பு கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மான எண் 87 நாள் 12-09-2011-ல் மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரகம் உத்தரவு வழங்காத நிலையில் ஒப்பந்தக் காலம் காலநீட்டிப்பு கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் 2 மாதம் கால நீட்டிப்பு வழங்கி தனது தீர்மான எண் 201 நாள் 29-12-2011-ல் அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஒப்புதல் பெற்று, 11-04-12-ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்பந்தம் இறுதியாக்கம் செய்யப்படவுள்ளது.

எனவே, புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பணியை ஒப்படைக்கும் காலம் வரை ஏற்கனவே பணியை மேற்கொண்டு வரும் தி./ள். சால்ஜா் நிறுவனத்தாருக்கு வரும் 26 ஜுலை 2012 வரை கால நீட்டிப்பு வழங்கவும் அதற்குண்டான செலவினத்திற்கும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 6474/08/எம்.டி. 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 57 நாள் 30.05.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலத்தில் உள்ள தெரு விளக்குகளை மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி செய்ய தி./ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தாருக்கு மாமன்ற தீர்மான எண் 210 நாள் 29.08.2008-ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக்காலம் 26.09.2011-ல் முடிவடைய உள்ள நிலையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் தனது தீர்மான எண் 521 நாள் 26.07.2011-ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் விலைகள் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரகம் பரிசீலனை செய்து அனுமதி வழங்க 3-8-2011-ல் கடிதம் மூலம் கோரப்பட்டது.

இந்நிலையில் 26-09-2011-ம் தேதியுடன் ஒப்பந்தகாலம் முடிவடைய உள்ளதால் கால நீட்டிப்பு கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மான எண் 84 நாள் 12-09-2011-ல் மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரகம் உத்தரவு வழங்காத நிலையில் ஒப்பந்தக் காலம் காலநீட்டிப்பு கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் 2 மாதம் கால நீட்டிப்பு வழங்கி தனது தீர்மான எண் 200 நாள் 29-12-2011-ல் அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஒப்புதல் பெற்று, 11-04-12-ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்பந்தம் இறுதியாக்கம் செய்யப்படவுள்ளது.

எனவே, புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பணியை ஒப்படைக்கும் காலம் வரை ஏற்கனவே பணியை மேற்கொண்டு வரும் தி./ள். சால்ஜா் நிறுவனத்தாருக்கு வரும் 26 ஜுலை 2012 வரை கால நீட்டிப்பு வழங்கவும் அதற்குண்டான செலவினத்திற்கும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 6476/08/எம்.டி. 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 58 நாள் 30.05.2012</u>**
அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலத்தில் உள்ள தெரு விளக்குகளை மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி செய்ய தி./ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தாருக்க்கு மாமன்ற தீர்மான எண் 209 நாள் 29.08.2008-ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக்காலம் 26.09.2011-ல் முடிவடைய உள்ள நிலையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் தனது தீர்மான எண் 521 நாள் 26.07.2011-ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் விலைகள் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரகம் பரிசீலனை செய்து அனுமதி வழங்க 3-8-2011-ல் கடிதம் மூலம் கோரப்பட்டது.

இந்நிலையில் 26-09-2011-ம் தேதியுடன் ஒப்பந்தகாலம் முடிவடைய உள்ளதால் கால நீட்டிப்பு கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மான எண் 86 நாள் 12-09-2011-ல் மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரகம் உத்தரவு வழங்காத நிலையில் ஒப்பந்தக் காலம் காலநீட்டிப்பு கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் 2 மாதம் கால நீட்டிப்பு வழங்கி தனது தீர்மான எண் 202 நாள் 29-12-2011-ல் அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஒப்புதல் பெற்று, 11-04-12-ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்பந்தம் இறுதியாக்கம் செய்யப்படவுள்ளது.

எனவே, புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பணியை ஒப்படைக்கும் காலம் வரை ஏற்கனவே பணியை மேற்கொண்டு வரும் தி./ள். சால்ஜா் நிறுவனத்தாருக்கு வரும் 26 ஜுலை 2012 வரை கால நீட்டிப்பு வழங்கவும் அதற்குண்டான செலவினத்திற்கும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 6477/08/எம்.டி. 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 59 நாள் 30.05.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலத்தில் உள்ள தெரு விளக்குகளை மூன்றாண்டு காலத்திற்கு பராமரிப்பு பணி செய்ய தி./ள். சால்ஜா் எலக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தாருக்கு மாமன்ற தீர்மான எண் 212 நாள் 29.08.2008-ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக்காலம் 26.09.2011-ல் முடிவடைய உள்ள நிலையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் தனது தீர்மான எண் 521 நாள் 26.07.2011-ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் விலைகள் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரகம் பரிசீலனை செய்து அனுமதி வழங்க 3-8-2011-ல் கடிதம் மூலம் கோரப்பட்டது.

இந்நிலையில் 26-09-2011-ம் தேதியுடன் ஒப்பந்தகாலம் முடிவடைய உள்ளதால் கால நீட்டிப்பு கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மான எண் 85 நாள் 12-09-2011-ல் மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரகம் உத்தரவு வழங்காத நிலையில் ஒப்பந்தக் காலம் காலநீட்டிப்பு கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் 2 மாதம் கால நீட்டிப்பு வழங்கி தனது தீர்மான எண் 203 நாள் 29-12-2011-ல் அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஒப்புதல் பெற்று, 11-04-12-ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்பந்தம் இறுதியாக்கம் செய்யப்படவுள்ளது.

எனவே, புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பணியை ஒப்படைக்கும் காலம் வரை ஏற்கனவே பணியை மேற்கொண்டு வரும் தி./ள். சால்ஜா் நிறுவனத்தாருக்கு வரும் 26 ஜுலை 2012 வரை கால நீட்டிப்பு வழங்கவும் அதற்குண்டான செலவினத்திற்கும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 6475/08/எம்.டி. 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 60 நாள் 30.05.2012</u>**

<u>அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.</u>

---

## பொருள் எண் 26

பொருள் : பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கொசு ஒழிப்பு பணிக்காக – அவசர அவசியத்தை முன்னிட்டு – தற்காலிகமாக 200 பணியாளா்களை தனியாா் மூலம் நியமனம் செய்வது – சம்மந்தமாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் கொசு ஒழிப்பு பணியை தீவிரப்படுத்தவும் டெங்கு நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அரசு செயலா் அவா்களின் காணொளி கூட்டம் 23.05.2012 அன்று நடைபெற்றது. அதில் தேவைப்பட்டால் கூடுதல் பணியாளா்கள் தற்காலிகமாக நியமனம் செய்யவும் மற்றும் தேவைக்கேற்ப கொசு மருந்து வாங்க ஆலோசனை கூறப்பட்டது. இதே போன்று 28.05.2012ம் தேதி வணக்கத்திற்குரிய மேயா் அவா்களால் நடத்தப்பட்ட கூட்டத்தில் கொசு ஒழிப்பு பணியாளா்கள் ஒரு வாா்டுக்கு 2 பணியாளா்கள் வீதம் 100 வாா்டுகளுக்கு 200 பணியாளா்களை தனியாா் மூலம் நியமனம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

தற்போது, இம்மாநகராட்சியில் திரு.மயில்வாணன், ஒப்பந்ததாரா் மூலம் 72 மலேரியா பணியாளா்கள் 1 வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 01.04.2011 முதல் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறாா்கள். இவா்களது ஒப்பந்தகாலம் 31.03.2012ல் முடிவடைந்ததால் மேலும், 01.04.2012 முதல் 30.06.2012 வரை 3 மாத காலம் ஒப்பந்த காலத்தை முன்பு வழங்கப்பட்ட தொகையின் அடிப்படையில் (ஒரு பணியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.4983/-) நீட்டிக்கவும் மற்றும் தற்போது இம்மாநகராட்சி 100 வாா்டுகளாக விரிவுபடுத்தப்பட்டுள்ளதால் வாா்டுக்கு 1 பணியாளா் வீதம் 100 பணியாளா்களை 01.07.2012 முதல் 30.03.2013 வரை 9 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமா்ததவும், மாமன்ற தீா்மான எண்.7-ன் படி அனுமதி வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது 1 வாா்டுக்கு 2 பணியாளா் வீதம் 200 பணியாளா்கள் ஒப்பந்தபுள்ளி கோரி நியமனம் செய்ய காலதாமதம் ஆகும். எனவே, கொசு ஒழிப்பு பணியை தீவிரப்படுத்த பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி 2 மாத காலத்திற்கு திரு.மயில்வாணன், ஒப்பந்ததாரா் மூலம் அன்னாருக்கு முன்பு வழங்கப்பட்ட தொகையின் அடிப்படையில், 1 வாா்டுக்கு 2 பணியாளா் வீதம் 200 பணியாளா்கள் பணிக்கு அமா்த்தவும் மற்றும் இதற்கான செலவினம் ரூ.20,00,000/-ற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 4135/2012/எம்.இ. 3

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 61 நாள் 30.05.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 27

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - கொசு ஒழிப்புத் திட்டம் - கொசுப்புகை மருந்தடிக்கும் இயந்திரங்கள் - ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்குதல் - தொடர்பாக.

கோயம்புத்தூா் மாநகராட்சி தற்போது ஐந்து மண்டலங்களாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது கையால் எடுத்துச் சென்று கொசுப்புகை மருந்தடிக்கும் இயந்திரங்கள் 50 எண்ணிக்கைகள் மட்டுமே உபயோகத்தில் உள்ளது. எனவே கூடுதலாக கையால் எடுததுச் சென்று கொசுப்புகை மருந்தடிக்கும் இயந்திரங்கள் 50 எண்ணிக்கைகள் ரூ.20 இலட்சத்திற்குள் வாங்கி விநியோகம் செய்ய 11.05.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டதில், திருவாளா். விஜய்மோகன் எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தாா் குறைந்த விலைப்புள்ளியை சமா்ப்பித்துள்ளாா்கள். எனவே, மேற்படி நிறுவனத்தாா் சமா்ப்பித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் மற்றும் இதற்கான செலவினம் ரூ.18,21,750/-ற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 4277/2011/எம்.இ. 4

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 62 நாள் 30.05.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயா்**
**கோயம்புத்தூா் மாநகராட்சி**